ராம்மோஹறன்

# ஹிந்தி தமிழ் சுயபோதினி



...றன் பப்ளிகேஷன்ஸ்

சென்னை

227

P152 Q 31

N66

132767

227
3.66
B

# ராம் மோஹன் ஹிந்தி சுவபோதினி

ஆசிரியர்:

M. ஜனகா,

[ராஷ்டிரபாஷா பிரவீண், பிரசாரக்]

**RAM MOHAN PUBLICATIONS**
MADRAS-5.

*Sole Selling Agents*

P. T. BELL & CO.,
7, SUNKURAMA CHETTY STREET,
MADRAS-1.

*Rights Reserved*

முதற்பதிப்பு—ஜுலை 1966

விலை ரூ. 1-50

பாரதி விஜயம் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

# முன்னுரை

சிலருக்கு ஹிந்தியை முறையாக ஆசிரியரிடம் கற்றுக் கொள்ள நேரமோ வசதியோ இல்லாமல் போகலாம். அத்தகையோர் தங்கள் சுயமுயற்சியாலேயே, ஹிந்தி கற்கப் பெரிதும் துணை செய்யும் இந்நூல்.

ஏற்கெனவே தேவநாகரி (ஹிந்தி) எழுத்துக்களைச் சரியானபடி எழுதவும் உச்சரிக்கவும் தெரிந்தவர்களுக்கு ஹிந்தி கற்பது மிகவும் எளிதாகும். அவ்வாறில்லாமல், எழுத்துக்களிலிருந்தே கற்கப் புகுவோருக்கு உதவியாக அவற்றை எழுதும் முறையும் உச்சரிக்கும் விதமும் முதலிரண்டு பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலே 12-ஆம் பாடம் வரை, ஹிந்திச் சொற்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் தமிழ் அர்த்தத்துடன், தமிழ் எழுத்துக்களில் (2, 3, 4 என்ற எண்கள் உதவி கொண்டு) உச்சரிப்பும் தரப் பட்டுள்ளது. மேலுள்ள பாடங்களில் தமிழ் எழுத்துக்களில் உச்சரிப்பு குறிக்கப்படவில்லை; தமிழில் அர்த்தம் மட்டும் தரப்பட்டிருக்கிறது.

அன்றுடம் அரை மணி நேரமாவது ஹிந்தி கற்கச் செலவழிப்பது அவசியம். கற்பவருடைய முயற்சியும் பயிற்சியுமே மிகவும் முக்கியம். இந்த நூல் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று அவர்களுக்குப் பயன்படுமென்று நம்புகிறோம்.

பதிப்பாளர்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவநாகிரி எழுத்து | ... 1 |
| 2. | உச்சரிப்பு | ... 10 |
| 3. | சொற்கள் | ... 14 |
| 4. | கூட்டெழுத்துக்கள் | ... 19 |
| 5. | வாக்கிய அமைப்பு | ... 22 |
| 6. | கட்டளை வினை | ... 27 |
| 7. | வினைச்சொல்-நிகழ்காலம் | ... 30 |
| 8. | கேள்விச் சொற்கள் | ... 36 |
| 9. | தொடர் நிகழ்கால வாக்கியங்கள் | ... 38 |
| 10. | பெயர்ச் சொற்களும் பெயர் உரிச் சொற்களும்... | 41 |
| 11. | வேற்றுமை | ... 46 |
| 12. | இடைச் சொற்கள் | ... 53 |
| 13. | பிரதிப் பெயர்ச் சொற்களும் வேற்றுமைஉருபுகளும் | 57 |
| 14. | பால்—எண் | ... 62 |
| 15. | எதிர்காலம் | ... 66 |
| 16. | இறந்தகாலம் | ... 70 |
| 17. | இறந்த காலம் (தொடர்ச்சி) | ... 76 |
| 18. | நம்நாடு | ... 83 |
| 19. | கதர் | ... 85 |
| 20. | வீட்டு மிருகங்கள் | ... 87 |
| 21. | நரியின் தந்திரம் | ... 89 |
| 22. | பொய் பேசியதின் பலன் | ... 91 |
| 23. | குடியானவனின் பிள்ளைகள் | ... 94 |
| 24. | கூட்டுவினைகள் | ... 97 |
| 25. | தொழிற்பெயர் | ... 99 |
| 26. | செய்வினையும் செயப்பாட்டு வினையும் | ... 102 |
| | பிற்சேர்க்கை | ... 106 |

# ராம் மோஹன்
## ஹிந்தி சுவபோதினி

---

## 1. தேவநாகரி எழுத்து

மொழிக்கு முதுகெலும்பு அதன் எழுத்து அல்லது லிபியாகும். லிபி இல்லாத சில மொழிகளும் உண்டு. அவற்றுக்கு இலக்கணமோ இலக்கியமோ கிடையாதாகை யால் அம் மொழிகள் நாளடைவில் வழக்கொழிந்து மங்கி மறைந்தே போகும். மொழி வரிவடிம் பெற்று வாழ்வது அதன் எழுத்தால் தான். ஹிந்தி மொழி எழுதப்பெறும் எழுத்துக்குத் தேவநாகரீ என்று பெயர்.

தேவநாகரி எழுத்துக்கள் மொத்தம் 46. அவற்றில் உயிரெழுத்துக்கள் 13.

தமிழ் மொழியின் உயிரெழுத்துக்களில் எ, ஒ என்று குறிலும் ஏ, ஓ என்று நெடிலும் உள்ளன. தேவநாகரியில் இரண்டு குறில் எழுத்துக்களும் கிடையாது. ரு, அம், அஹ, என்னும் உயிரெழுத்துக்கள் தேவநாகரியில் உள்ளவை. தமிழில் இவை இல்லை.

எ, ஒ என்ற குறில் எழுத்துக்கள் தேவநாகரியில் இல்லை யெனினும் அவற்றின் உச்சரிப்பு சில சொற்களில் வருவதுண்டு. அவ்விடங்களில் நெடிலை எழுதிக் குறிலாக உச்சரிப்பது வழக்கம். ரு என்ற எழுத்தை ரு, ரி இவ்

விரண்டு எழுத்துக்களுக்கும் இடையே உச்சரிக்க வேண்டும்.

**எழுதும் முறை :** தேவநாகரி எழுத்துக்கள் எல்லா வற்றிலும் தலையில் ஒரு படுக்கைக் கோடு இருப்பதைக் காணலாம். பெரும்பான்மையான எழுத்துக்கள் தூண் போன்ற நேர்க்கோடுகளையும் பெற்றிருக்கின்றன. இவ் விரு கோடுகளையும் நீக்கிப் பார்த்தால் எஞ்சியுள்ள பகுதியே எழுத்தின் முக்கியப் பகுதியாகும். எனவே எழுதப் புகும்பொழுது முதலில் முக்கியப் பகுதியையும், பிறகு தூண் போன்ற நேர்க்கோட்டையும் கடைசியில் படுக்கைக் கோட்டையும் எழுதவேண்டும். எழுதுவதற்குச் சரியான முறை இதுவே.

4, 5, 6, 7 ஆம் பக்கங்களில் தேவநாகரி எழுத்துக் களை எங்கே தொடங்கி எந்த முறையில் எழுதவேண்டும் என்பது 1, 2, 3....என்ற எண்களால் காட்டப் பட்டுள்ளது.

### உயிரெழுத்துக்கள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ | ऊ |

| ரு | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|
| ऋ | ए | ऐ | ओ | औ |

| அம் | அஹ |
|---|---|
| अं | अः |

## மெய்யெழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| க | க$^2$ | க$^3$ | க$^4$ | ங |
| क | ख | ग | घ | ङ |
| ச | ச$^2$ | ஜ | ச$^4$ | ஞ |
| च | छ | ज | झ | ञ |
| ட | ட$^2$ | ட$^3$ | ட$^4$ | ண |
| ट | ठ | ड | ढ | ण |
| த | த$^2$ | த$^3$ | த$^4$ | ந |
| त | थ | द | ध | न |
| ப | ப$^2$ | ப$^3$ | ப$^4$ | ம |
| प | फ | ब | भ | म |
| ய | ர | ல | வ | |
| य | र | ल | व | |
| ச | ஷ | ஸ | ஹ | |
| श | ष | स | ह | |

अ आ इ

ई उ ऊ ऋ

ए ऐ ओ

औ अं अः





श ष स

ह क्ष त्र

ज्ञ

## உயிர் மெய்யெழுத்துக்கள்

உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்களாகின்றன. உயிர் எழுத்துக்களின் சின்னங்களை மெய்யெழுத்து அகரத்துடன் முறையே சேர்த்தால் அம் மெய்யெழுத்தின் எல்லா உயிர் மெய்யெழுத்துக்களும் கிடைக்கும்.

உயிரெழுத்துக்களின் சின்னங்கள் :—

अ आ इ ई उ ऊ ऋ

ा ि ी ु ू ृ

ए ऐ ओ औ अं अः

े ै ो ौ ं ः

உயிர் மெய் சேர்த்தல் :—

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| क | + | ा | = | का | கா | क | + | े | = | के | கே |
| क | + | ि | = | कि | கி | क | + | ै | = | कै | கை |
| क | + | ी | = | की | கீ | क | + | ो | = | को | கோ |
| क | + | ु | = | कु | கு | क | + | ौ | = | कौ | கௌ |
| क | + | ू | = | कू | கூ | क | + | ं | = | कं | கம் |
| क | + | ृ | = | कृ | க்ரு | क | + | ः | = | कः | கஹ |

உயிர் மெய் யெழுத்துக்கள்:—

க கா கி கீ கு கூ க்ரு கே கை கோ கௌ கம் கஹ

क का कि की कु कू कृ के कै को कौ कं कः

ச சா சி சீ சு சூ ச்ரு சே சை சோ சௌ சம் சஹ

च चा चि ची चु चू चृ चे चै चो चौ चं चः

ட டா டி டீ டு டூ ட்ரு டே டை டோ டௌ டம் டஹ
ट टा टि टी टु टू टृ टे टै टो टौ टं टः

த தா தி தீ து தூ த்ரு தே தை தோ தௌ தம் தஹ
त ता ति ती तु तू तृ ते तै तो तौ तं तः

ப பா பி பீ பு பூ ப்ரு பே பை போ பௌ பம் பஹ
प पा पि पी पु पू पृ पे पै पो पौ पं पः

ர ரா ரி ரீ ரு ரூ ரே ரை ரோ ரௌ ரம் ரஹ
र रा रि री रु रू – रे रै रो रौ रं रः

ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹ்ரு ஹே ஹை ஹோ ஹௌ ஹம் ஹஹ
ह हा हि ही हु हू हृ हे है हो हौ हं हः

र என்னும் எழுத்துடன் உகரம் அல்லது ஊகாரத்தின் சின்னத்தை மற்றெல்லா எழுத்துக்களையும் போல் எழுத்தினடியில் சேர்க்காமல் அதன் நடுவே சேர்த்திருப்பதைக் காண்க. அங்ஙனமே 'ஹ' என்னும் எழுத்துடன் ऋ சேரும்போது அதன் சின்னமும் எழுத்தின் நடுவிலேயே சேர்க்கப்பட்டுள்ளது.

அகரமுதலிய உயிர் சேராத ஒற்றெழுத்துக்களை क् च् ट् त् प् என்றிவ்வாறே எழுத வேண்டும்.

## 2. உச்சரிப்பு

மெய் யெழுத்துக்கள் தமிழில் 18 தேவநாகரியில் 33. ஹிந்தி மொழியில் ஒவ்வோர் உச்சரிப்புக்கும் ஒவ்வோர் எழுத்து இருப்பதே இதற்குக் காரணம். க, ச, ட, த, ப என்னும் ஐந்து வல்லின எழுத்துக்களும் ங, ஞ, ண, ந, ம என்னும் ஐந்து மெல்லின எழுத்துக்களும் தவிர ஹிந்தியில் ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ளது போல் க, ச, ட, த, ப வுக்கு ஹகாரம் சேர்த்த அழுத்தமான உச்சரிப்பு, கண்டத்துவனியுடன் கூடிய மெல்லிய உச்சரிப்பு, அதற்கு ஹகாரம் சேர்த்த உச்சரிப்பு ஆக மூன்று மாறுதல்கள் உண்டு. மாறுபட்ட இந்த உச்சரிப்புக்களைத் தமிழர்களாகிய நாம் ஓரளவு கையாண்ட போதிலும் இவற்றிற்குரிய எழுத்துக்கள் தமிழில் இல்லை. ஒரே எழுத்தைக் கொண்டே இவற்றில் சில உச்சரிப்புக் களை இடத்துக்குத் தக்கவாறு கையாள்கிறோம். உதாரணமாக 'க' என்ற எழுத்தைப் பார்ப்போம். கணக்கு, கந்தன் என்ற சொற்களில் 'க' வின் இயல்பான உச்சரிப்பு உள்ளது. தேவநாகரியின் 'क' வுக்கும் மேற்கண்ட சொற்களிலுள்ள 'க' வுக்கும் உச்சரிப்பு ஒன்றே. தங்கம், மங்கலம் என்னும் சொற்களில் தேவநாகரியின் மூன்றும் எழுத்தான கண்டத்துவனி (ग) உச்சரிப்பே ஒலிக்கிறது. குகன், கிரகம் என்ற சொற்களில் உள்ள 'கு', 'கி' இவற்றைக் கவனித்துப் பார்த்தால் தேவநாகரியின் நான்காம் எழுத்தான கண்டத்துவனியுடன் ஹகாரம் சேர்த்த உச்சரிப்பு (घ) ஒலிப்பதை உணரலாம்.

தேவநாகரியில் ஒவ்வோர் உச்சரிப்புக்கும் ஒவ்வோர் எழுத்து இருப்பதால் அதனைக் கற்பது எளிதே. தமிழ்

எழுத்துக்கள் மூலம் தேவநாகரியைக் கற்கும் போது நாம் சில முக்கிய விதிகளைக் கருத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

தேவநாகரியின் क, च, ट, त, प வுக்கும் தமிழின் க, ச, ட, த, ப வுக்கும் உச்சரிப்பில் சிறிதும் பேதமில்லை. இரண்டாம் எழுத்தான ख, छ, ठ, थ, फ ஆகியவை ஹகாரம் சேர்ந்த அழுத்தமான உச்சரிப்பை உடையன. இவற்றை உச்சரிக்கையில் 'க்ஹ' என்று சேர்ந்தாற்போல் உச்சரிக்க வேண்டும். ஹகாரம் பிரிந்து ஒலிக்கக்கூடாது. இனி, தேவநாகரியின் மூன்றும் எழுத்தான ग, ज, ड, द, ब என்னுமிவை கண்டத்துவனியுடன் கூடிய மெல்லிய உச்சரிப்பைப் பெற்றவை. தங்கம், இஞ்சி, குடம் கூந்தல், வம்பு ஆகிய தமிழ்ச் சொற்களில் உள்ள க, ச, ட, த, ப வை இவற்றிற்கு உதாரணமாகக் கொள்ளலாம். நான்காம் எழுத்தாகிய घ, झ, ढ, ध, भ என்பவை கண்டத்துவனியுடன் கூடிய மெல்லெழுத்துக்களுக்கு ஹகாரம் சேர்த்த உச்சரிப்பைப் பெற்றவை.

தமிழ் எழுத்துக்கள் வாயிலாக இவற்றைப் பயிலும் போது உச்சரிப்பில் பிறழாதிருப்பதற்காக முதல் எழுத்தைத் தவிர, எஞ்சியவற்றிற்கு முறையே 2, 3, 4 என எண்கள் தரப்பட்டிருக்கின்றன. 'ச' வின் மூன்றும் எழுத்து மட்டும் 'ஜ' என்றே குறிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக श, ष, स, ह என்னும் எழுத்துக்களில் श நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் தமிழில் ஏற்கெனவே கையாளப் பெற்றுவரும் க்ரந்த எழுத்துக்களான ஷ, ஸ, ஹ வை ஒக்கும். श என்னும் எழுத்தை ஒத்த

கிரந்த எழுத்து தமிழில் வழங்கப் பெருமையாலும், ஹிந்தியில் श वும் ष வும் பேதமின்றி உச்சரிக்கப் பெறுவதாலும் இவ்வெழுத்து இனி வரும் பாடங்களில் 'ஷ' வென்றே குறிக்கப்பட்டுள்ளது. இந்த 'श' வை சமையல், சட்டி, பசை என்னுமிச் சொற்களில் உள்ள 'ச'வைப் போன்று உச்சரிக்க வேண்டும்.

F, Z என்னும் ஆங்கில எழுத்துக்களின் உச்சரிப்புக்காக फ, ज இவ்விரண்டு எழுத்துக்களின் கீழே புள்ளி சேர்த்து வழங்குகிறுர்கள். फ़ ज़ முறையே F, Z உச்சரிப்பைப் பெறுகின்றன.

அகரம் குறுகும் விதி:—ஹிந்திச் சொற்களில் மெய்யகரங்கள் சில இடங்களில் மெய்யொற்றுக்களைப் போன்று உச்சரிக்கப் பெறுகின்றன. அகரம் குறுகும் இடங்களை அறியச் சில விதிகள் உண்டு.

1. சொல்லின் இறுதியில் வரும் அகரம் உச்சரிக்கப்பட மாட்டாது.

(உ-ம்) घर என்ற சொல்லைக் 'க⁴ர' என்று உச்சரிக்கலாகாது. இச் சொல்லின் முதலெழுத்தாகிய 'க⁴' வில் அகரம் உச்சரிக்கப் படுகிறது. இறுதி எழுத்தான 'र' விலுள்ள அகரத்தை உச்சரிக்கக் கூடாது. எனவே, இச்சொல் 'க⁴ர்' என்று உச்சரிக்கபடும். कल என்பது 'கல்' எனவும் 'नल', என்பது 'நல்' எனவும், உச்சரிக்கப் படவேண்டும்.

2. மூன்றெழுத்துள்ள சொல்லின் இடையில் மெய்யகரம் வந்து கடைசி எழுத்து அகரமல்லாத வேறு எழுத்தானால் இடையிலுள்ள மெய்யகரம் குறுகி மெய்யொற்றின் உச்சரிப்பைப் பெறும்.

(உ-ம்) **कपड़ा** என்பது 'கப்ட$^{3}$ா' என்று உச்சரிக்கப் பெறும். **कमरा** 'கம்ரா' என்றும், **कितना** 'கித்ந' என்றுமே படிக்கப்படவேண்டும்.

3. மூன்றெழுத்துச் சொல்லின் இரண்டாம், மூன்றும் எழுத்துக்கள் அகரத்துடன் கூடிய மெய்யெழுத்துக்களானால் கடைசி எழுத்தில் மட்டும் அகரம் உச்சரிக்கப் படுவதில்லை.

(உ-ம்) **शहर** என்பது 'ஷஹர்' என்று உச்சரிக்கப் பெறும்.

**सडक** ஸட$^{3}$க் என்றும் **जगह** ஜக$^{3}$ஹ் என்றுமே படிக்கப் படவேண்டும்.

4. நான்கெழுத்துச் சொல்லில் இரண்டாம் எழுத்திலும் நான்காம் எழுத்திலும் உள்ள அகரம் உச்சரிக்கப் படமாட்டாது.

(உ-ம்) **शरबत** என்னும் சொல் 'சர்ப$^{3}$த்' என்று உச்சரிக்கப்படும்.

**खरगोश** க$^{2}$ர்கோ$^{3}$ஷ்; **मखमल** மக்$^{2}$மல்.

5. ஓரெழுத்தொரு சொல்லாயிருப்பின் அகரம் உச்சரிக்கப்படும்.

(உ-ம்) '**न**' என்பது 'ந' என்றே கூறப்பட வேண்டும். 'ந்' என்று உச்சரிக்கலாகாது.

# 3. சொற்கள்

முன் பாடங்களில் தேவநாகரி எழுத்துக்களையும் அவற்றின் சரியான உச்சரிப்புக்களையும் கற்றுக் கொண்டோம். இப்பாடத்தில் சில சொற்களைப் பயில்வோம்.

எழுத்துக்கள் பல சேர்ந்ததே வார்த்தை அல்லது சொல் ஆகும். ஒவ்வோர் மொழியிலும் ஒரெழுத்தொரு சொல்லாகச் சில சொற்கள் உண்டு. தமிழில் ஆ, ஈ, பூ, மா, தை போன்ற ஒரெழுத்தொரு சொற்களை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறே ஹிந்தியிலும் சில உள்ளன. அவை வருமாறு :

| | உச்சரிப்பு | சொல் | பொருள் |
|---|---|---|---|
| 1. | கீ⁴ | घी | நெய் |
| 2. | ஜௌ | जौ | பார்லி |
| 3. | தூ | तू | நீ |
| 4. | மைன் | मैं | நான் |
| 5. | தோ³ | दो | இரண்டு |
| 6. | ச²ஹ | छः | ஆறு |
| 7. | நௌ | नौ | ஒன்பது |
| 8. | ஸௌ | सौ | நூறு |
| 9. | மான் | माँ | அம்மா |
| 10. | ஹான் | हाँ | ஆமாம் |
| 11. | ந | न | இல்லை |
| 12. | கை | कै | வாந்தி |

## இரண்டெழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அப்³ | अब | இப்பொழுது |
| ஆம் | आम | மாம்பழம் |

| | | |
|---|---|---|
| ஈத்$^{3}$ | ईद | 'ஈத்' பண்டிகை |
| உட்$^{2}$ | उठ | எழுந்திரு |
| ஊன் | ऊन | கம்பளி |
| ருண் | ऋण | கடன் |
| ஏக் | एक | ஒன்பது |
| ஐன் | ऐन | நல்ல |
| ஓஸ் | ओस | பனி |
| ஔர் | और | மேலும் |
| கல் | कल | நேற்று, நாளை |
| க$^{2}$க்$^{3}$ | खग | பட்சி |
| க$^{3}$ஜ் | गज | கெஜம் |
| க$^{4}$ர் | घर | வீடு |
| சல் | चल | நட |
| ச$^{2}$ல் | छल | கபடம், சூழ்ச்சி |
| ஜல் | जल | தண்ணீர் |
| ச$^{4}$ட் | झट | உடனே |
| டப்$^{3}$ | टब | தண்ணீர்த்தொட்டி |
| ட$^{2}$க்$^{3}$ | ठग | கொள்ளைக்காரன் |
| ட$^{3}$ர் | डर | பயம் |
| தன் | तन | உடல் |
| த$^{3}$ல் | दल | கோஷ்டி, குழு |
| த$^{4}$ன் | धन | செல்வம், தனம் |
| நல் | नल | குழாய் |
| பல் | पल | விநாடி |
| ப$^{2}$ல் | फल | பழம் |
| ப$^{3}$ல் | बल | பலம் |
| பட்$^{4}$ | पढ | படி |

| | | |
|---|---|---|
| ப²ண் | फण | பாம்பின் படம் |
| ப³ம் | बम | வெடி குண்டு, பாம் |
| ப⁴ய் | भय | பயம் |
| ப⁴ஜ் | भज | துதி செய் |
| மட்² | मठ | மடம் |
| மண் | मण | மணங்கு |
| யஷ் | यश | கீர்த்தி, புகழ் |
| ரஸ் | रस | ரஸம் |
| லட்³ | लड | சண்டைசெய் |
| வன் | वन | காடு |
| வர் | वर | மணமகன் ; சிறந்த |
| ஷக் | शक | சந்தேகம் |
| ஷர் | शर | அம்பு |
| ஸஜ் | सज | அலங்கரித்துக்கொள் |
| ஸப்³ | सब | எல்லோரும் |
| ஹல் | हल | கலப்பை |

## மூன்றெழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அஜப்³ | अजब | விசித்திரமான |
| இத⁴ர் | इधर | இங்கே |
| உத⁴ர் | उधर | அங்கே |
| ஊபர் | ऊपर | மேலே |
| கலம் | कलम | பேனா |
| கமல் | कमल | தாமரை |
| கனக் | कनक | தங்கம், பொன் |
| சமக் | चमक | ஒளி |
| ச⁴லக் | झलक | ஒளி |
| நமக் | नमक | உப்பு |

| | | |
|---|---|---|
| ஸட3க் | सडक | தெரு |
| மஹக் | महक | வாசனை |
| மஹல் | महल | மாளிகை |
| க3ரம் | गरम | சூடான |
| நரம் | नरम | மிருதுவான |
| ஷஹர் | शहर | நகரம் |
| லஹர் | लहर | அலை |
| பஹர் | पहर | ஜாமம் |
| பலக் | पलक | இமை |
| க3லத் | गलत | தவறு |

## நான்கெழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அத்3ரக்2 | अदरख | இஞ்சி |
| அர்ஹர் | अरहर | துவரை |
| கட்ஹல் | कटहल | பலாப்பழம் |
| க2ட்மல் | खटमल | மூட்டைப்பூச்சி |
| க3ட்3ப3ட்3 | गडबड | குழப்பம் |
| ச4ட்பட் | झटपट | அவசரமாக |
| பன்க4ட் | पनघट | தண்ணீர்த் துறை |
| பல்டன் | पलटन | சேனை |
| பு3ல்பு3ல் | बुलबुल | வானம்பாடி |
| மஸ்நத்3 | मसनद | திண்டு |
| சர்ப3த் | शरबत | சர்பத் |
| ஸர்பட் | सरपट | நாற்கால் பாய்ச்சல் |

## பிற உயிர் மெய் கலந்த சொற்கள்

| | | |
|---|---|---|
| காம் | काम | வேலை |
| கான் | कान | காது |

| | | |
|---|---|---|
| கா$^{2}$ட் | खाट | கட்டில் |
| கா$^{2}$னா | खाना | உணவு |
| கா$^{2}$ல் | खाल | தோல் |
| க$^{3}$லீ | गली | சிறிய தெரு, சந்து |
| கா$^{3}$ய் | गाय | பசு |
| க$^{4}$டி$^{3}$ | घडी | கடிகாரம் |
| கோ$^{4}$டா$^{3}$ | घोडा | குதிரை |
| சாய் | चाय | தேநீர் |
| சீனீ | चीनी | சர்க்கரை |
| சோர் | चोर | திருடன் |
| ஜால் | जाल | வலை |
| ஜூ$^{4}$ட்$^{2}$ | झूठ | பொய் |
| டாங்க்$^{3}$ | टाँग | கால் |
| ட$^{2}$ண்டா$^{3}$ | ठंडा | குளிர்ந்த |
| டா$^{3}$ல் | डाल | கிளை |
| தாஜா | ताज़ा | புதிய |
| தி$^{3}$ன் | दिन | நாள்; பகல் |
| தூ$^{4}$ல் | धूल | புழுதி, தூசு |
| பான் | पान | வெற்றிலை |
| புல் | पुल | பாலம் |
| பா$^{3}$ஜா | बाज़ा | வாத்தியம் |
| பீ$^{3}$ஜ் | बीज | விதை |
| பா$^{4}$லூ | भालू | கரடி |
| மால் | माल | சாமான்கள், திரவியம் |
| மோதீ | मोती | முத்து |
| தோ$^{4}$தீ | धोती | வேஷ்டி |
| ரோடீ | रोटी | ரொட்டி |

| | | |
|---|---|---|
| தை²லீ | थैली | பை |
| மைலா | मैला | அழுக்கான |
| கௌன் | कौन | யார் |
| சோ⁴ம்ப்டா³ | झोंपडा | குடிசை |
| லடா³யீ | लडाई | சண்டை |
| சிடி³யா | चिडिया | பறவை |
| கிதாப்³ | किताब | புத்தகம் |
| மைதா³ன் | मैदान | மைதானம் |
| ருப்யா | रुपया | ரூபாய் |
| ரூமால் | रूमाल | கைக்குட்டை |
| ப³ஹாது³ர் | बहादुर | வீரன் |
| ஸலத்னத் | सलतनत | தலை நகரம் |
| அகல்மந்த்³ | अकलमंद | புத்திமான் |
| ஜங்க³ல் | जंगल | காடு |
| கு³டி³யா | गुडिया | பொம்மை |
| மத்³ரஸா | मद्रसा | பள்ளிக்கூடம் |
| ஆஸ்மான் | आसमान | ஆகாயம் |
| பக்³வான் | भगवान | கடவுள் |
| மேஹ்மான் | मेहमान | விருந்தாளி |
| மாலிக் | मालिक | எஜமானன், சொந்தக்காரன் |
| மிடா²யீ | मिठाई | மிட்டாய் |

—*—

# 4. கூட்டெழுத்துக்கள்

தமிழில் கூட்டெழுத்துக்கள் இல்லை ; தேவநாகரியில் உண்டு. தமிழில் இரு மெய்யெழுத்துக்களின் உச்சரிப்பு ஒன்றையொன்று ஒட்டி வரும்போது அவற்றில் முத

லெழுத்து மெய்யொற்ருகவும் இரண்டாம் எழுத்து உயிர் மெய்யாகவும் தனித்தனியே எழுதுகிரேம். ஹிந்தியில் இரண்டெழுத்துக்களும் சேர்த்து எழுதப்படுகின்றன. அங்ஙனம் எழுதுகையில் ஒற்றெழுத்தின் உருவம் சுருக்கப் பட்டு, இரண்டாம் எழுத்துடன் சேர்த்து எழுதப்பெறும்.

ஒற்றெழுத்தின் சுருங்கிய உருவம் எழுத்துக்குத் தக்கபடி மாறும்.

பெரும்பான்மை ஹிந்தி எழுத்துக்களில் தூண் போலும் நேர்க்கோடு இருக்கிறதல்லவா? இவை ஒன்ருே டொன்று இணைந்து கூட்டெழுத்துக்களாகும் போது, முதலெழுத்திினின்று நேர்க்கோட்டை நீக்கி எஞ்சிய பகுதியுடன் அடுத்த எழுத்துச் சேர்த்து எழுதப்படு கிறது. அவற்றில் சில வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| क् + य = क्य | க்யா | क्या | என்ன |
| ख् + य = ख्य | க்$^{3}$யாதி | ख्याति | புகழ் |
| ग् + व = ग्व | க்$^{3}$வாலா | ग्वाला | இடையன் |
| च् + छ = च्छ | அச்சா$^{2}$ | अच्छा | நல்லது |
| ज् + व = ज्व | ஜ்வர் | ज्वर | ஜ்வரம் |
| ण् + ड = ण्ड | ட$^{2}$ண்டா$^{3}$ | ठण्डा | குளிர்ந்த |
| त् + य = त्य | த்யாக்$^{3}$ | त्याग | தியாகம் |
| प् + य = प्य | ப்யார் | प्यार | அன்பு |
| फ् + त = फ्त | ஹப்$^{2}$தா | हफ्ता | வாரம் |
| व् + य = व्य | வ்யாபார் | व्यापार | வியாபாரம்; [செயல் |
| स् + त = स्त | சுஸ்த் | चुस्त | சுறுசுறுப் பான |

நேர்க்கோடு இல்லாத எழுத்துக்கள் கூட்டெழுத்தாக வரும்போது ஒன்றன் கீழ் ஒன்ருக அமையும். எவ்வாறெனில் :

| | | | |
|---|---|---|---|
| ङ् + क = ङ्क | பங்கஜ் | पङ्कज | தாமரை |
| ट् + ट = ट्ट | டட்டி | टट्टी | மறைவிடம், [தடுப்பு. |
| ल् + ल = ल्ल | முல்லா | मुल्ला | முஸ்லிம் [மதகுரு |

'र' என்ற எழுத்துடன் வேறு எழுத்து சேர்ந்து கூட்டெழுத்தானல் 'र' வின் உருவம் பின் வருமாறு மாறும்.

र् + ण = र्ण கர்ண कर्ण காது ; கர்ணன்

மேற்கண்ட சொல்லில் कर्ण என்ற மூன்று எழுத்துக்கள் உள்ளன. இடையே உள்ள र என்னும் ஒற்று குறுகி 'ण' என்ற எழுத்தின் மேல் '◌र्' வடிவில் இணைந்துள்ளது.

ஏதேனும் ஒரு மெய்யெழுத்துடன் 'र' சேரும் பொழுது அவ்வெழுத்தின் முன் பாகத்தில் '◌्र' வடிவில் சேர்க்கப் பெறும்.

(உ-ம்) ग् + र = ग्र க்³ரஹ ग्रह கிரகம்

प् + र = प्र ப்ரபா⁴த் प्रभात காலை

ट, ठ, ड, ढ, ஆகிய எழுத்துக்களுடன் 'र' சேரும் போது அவ்வெழுத்துக்களின் அடியில் '‸' வடிவில் இணையும். ट्र, ठ्र, ड्र, ढ्र,

श, त இவ்விரு எழுத்துக்களுடன் 'र' சேர்ந்து கூட்டெழுத்தாகும் பொழுது அவ்வெழுத்துக்களின் உருவமே மாறுகிறது.

श् + र = श्र    ச்ரம்    श्रम    சிரமம்
त् + र = त्र    பத்ர    पत्र    கடிதம்

வேறு சில எழுத்துக்களும் கூட்டெழுத்துக்களாகும் போது உருமாற்றம் பெறுகின்றன. அவை வருமாறு :

क् + त = क्त    பக்த    भक्त    பக்தன்
त् + त = त्त    பத்தா    पत्ता    இலை
द् + द = द्द    ரத்³த³    रद्द    ரத்து
द् + य = द्य    வித்³யார்த்தி²    विद्यार्थी    மாணவன்
ज् + ञ = ज्ञ    விஞ்ஞான்    विज्ञान    விஞ்ஞானம்
श् + च = श्च    பச்சாத்    पश्चात    பிறகு

'ह' என்ற எழுத்துடன் வேறு எழுத்துக்கள் சேரும் போது அவை விசித்திர முறையில் ह வின் நடுப்பாகத்தில் பொருந்தும்.

ह + य = ह्य    ஸஹ்ய    सह्य    சகிக்கக்கூடிய
ह + र = ह्र    ஹ்ராஸ்    ह्रास    அழிவு
ह + ल = ह्ल    ப்ரஹ்லாத்³    प्रह्लाद    ப்ரகலாதன்
ह + व = ह्व    ஜிஹ்வா    जिह्वा    நாக்கு

## 5. வாக்கிய அமைப்பு

ஹிந்தி வாக்கியங்களின் சாதாரண அமைப்பு தமிழ் வாக்கியங்களைப் போன்றதே. வாக்கியத்தின் துவக்கத்தில் எழுவாயும் இடையில் செயப்படு பொருளும் முடிவில் பயனிலையும் வரும்.

'இது பேனா' 'அது காகிதம்' முதலிய தமிழ் வாக்கியங்களில் வினைச்சொல் தொக்கு நிற்கிறதல்லவா? ஹிந்தியில் இவ்வாறு தொக்கு நிற்காது. 'यह कलम है।' இவ்வாக்கியத்தில் 'है' என்ற வினைச் சொல் தொக்கு நிற்காமல் விரிந்து நிற்பதைக் காண்க.

## சில புதிய சொற்கள்

யஹ் **यह** இவன், இவள், இது, இந்த
வஹ் **वह** அவன், அவள், அது, அந்த
ஹை **है** இருக்கிறது, இருக்கிறான், இருக்கிறாள்.
ஹைன் **हैं** இருக்கின்றன, இருக்கிறார்கள்.
மேஜ் **मेज़** மேஜை
குர்ஸீ **कुर्सी** நாற்காலி.
கஹான் **कहाँ** எங்கே
பர் **पर** மேல்

| | | |
|---|---|---|
| ஜமீன் | **जमीन** | தரை |
| பீ[4] | **भी** | கூட, உம் |
| அல்மாரி | **अलमारी** | அலமாரி |
| த[3]வாத் | **दवात** | மைக்கூடு |
| ஸ்யாஹீ | **स्याही** | மை |

### வாக்கியங்கள்

யஹ் கே[3]பால் ஹை.
**यह गोपाल है।** — இவன் கோபால்.
யஹ் ராதா[4] ஹை.
**यह राधा है।** — இவள் ராதா.
வஹ் கோ[3]விந்த்[3] ஹை.
**वह गोविंद है।** — அவன் கோவிந்தன்.
வஹ் ஸரலா ஹை.
**वह सरला है।** — அவள் ஸரளா.
யஹ் க்யா ஹை.
**यह क्या है?** — இது என்ன?

யஹ் கலம் ஹை.

यह कलम है। — இது பேனா.

வஹ் க்யா ஹை ?

वह क्या है? — அது என்ன?

வஹ் கிதாப்[3] ஹை.

वह किताब है। — அது புத்தகம்.

கலம் கஹான் ஹை ?

कलम कहाँ है? பேனா எங்கே இருக்கிறது?

கலம் மேஜ் பர் ஹை.

कलम मेज़ पर है। — பேனா மேசைமீது இருக்கிறது.

கிதாப்[3] கஹான் ஹை ?

किताब कहाँ है? — புத்தகம் எங்கே இருக்கிறது?

கிதாப்[3] அல்மாரி மேன் ஹை.

किताब अलमारी में है। —புத்தகம் அலமாரியில் [இருக்கிறது.

ஜமீன் பர் க்யா ஹை ?

जमीन पर क्या है? — தரை மேல் என்ன இருக்கிறது?

ஜமீன் பர் குர்ஸீ ஹை.

जमीन पर कुर्सी है। — தரையின் மேல் நாற்காலி இருக்கிறது.

மேஜ் கஹான் ஹை ?

मेज़ कहाँ है? — மேசை எங்கே இருக்கிறது?

மேஜ் பீ[4] ஜமீன் பர் ஹை.

मेज़ भी जमीन पर है। — மேசையும் தரையின் மேல் [இருக்கிறது.

குர்ஸீ ஔர் மேஜ் ஜமீன் பர் ஹைன்.

कुर्सी और मेज़ जमीन पर हैं। — நாற்காலியும் [மேசையும் தரையின் மேல் இருக்கின்றன.

யஹ் க்யா ஹை ?

**यह क्या है ?** — இது என்ன ?

யஹ் த³வாத் ஹை.

**यह दवात है ।** — இது மைக்கூடு.

த³வாத் மேன் க்யா ஹை ?

**दवात में क्या है ?** — மைக்கூட்டில் என்ன இருக்கிறது ?

த³வாத் மேன் ஸ்யாஹீ ஹை.

**दवात में स्याही है ।** — மைக்கூட்டில் மை இருக்கிறது.

த³வாத் கஹான் ஹை ?

**दवात कहाँ है ?** — மைக்கூடு எங்கே இருக்கிறது ?

த³வாத் பீ⁴ மேஜ் பர் ஹை.

**दवात भी मेज़ पर है ।** — மைக்கூடும் மேசை மேல் இருக்கிறது.

## வாக்கியங்கள்—2

சில புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| சடாயீ | **चटाई** | பாய் |
| சாய் | **चाय** | தேநீர் |
| காக³ஜ் | **कागज** | காகிதம் |
| யஹான் | **यहाँ** | இங்கே |
| வஹான் | **वहाँ** | அங்கே |
| நௌகர் | **नौकर** | வேலைக்காரன் |
| லாநா | **लाना** | கொண்டு வா |
| பீநா | **पीना** | குடிக்க, அருந்த. |

ராம் யஹான் ஹை.

**राम यहाँ है।** — ராமன் இங்கே இருக்கிறான்.

கோ[3]விந்த்[3] வஹான் ஹை.

**गोविंद वहाँ है।** — கோவிந்தன் அங்கே இருக்கிறான்.

ராம் சடாயீ பர் ஹை.

**राम चटाई पर है।** —ராமன் பாயின்மேல் இருக்கிறான்.

கோ[3]விந்த்[3] ஜமீன் பர் ஹை.

**गोविंद जमीन पर है।** — கோவிந்தன் தரையின் மேல் [இருக்கிறான்.

யஹ் காக[3]ஜ் ஹை.

**यह कागज़ है।** — இது காகிதம்.

காக[3]ஜ் மேஜ் பர் ஹை.

**कागज़ मेज पर है।** —காகிதம் மேசை மேல் இருக்கிறது

கலம் பீ[4] மேஜ் பர் ஹை.

**कलम भी मेज़ पर है।**

பேனாவும் மேசை மேல் இருக்கிறது.

காக[3]ஜ் ஔர் கலம் மேஜ் பர் ஹைன்.

**कागज़ और कलम मेज़ पर हैं।**

காகிதமும் பேனாவும் மேஜைமீது இருக்கின்றன.

நௌகர் சாய் லாதா ஹை.

**नौकर चाय लाता है।**

வேலைக்காரன் தேநீர் கொண்டுவருகிறான்.

ராம் ஔர் கோவிந்த்[3] சாய் பீதே ஹைன்.

**राम और गोविंद चाय पीते हैं।**

ராமனும் கோவிந்தனும் தேநீர் அருந்துகிறார்கள்.

## 6. கட்டளை வினை

**வினைச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | आ | வா | தே$^{3}$ | दे | கொடு |
| ஜா | जा | போ | கர் | कर | செய் |
| கா$^{3}$ | खा | சாப்பிடு | பை$^{3}$ட்$^{2}$ | बैठ | உட்கார் |
| பீ | पी | குடி, அருந்து | லா | ला | கொண்டுவா |
| பட்$^{4}$ | पढ़ | படி | லே | ले | எடுத்துக்கொள் |
| லிக்$^{2}$ | लिख | எழுது | மத் | मत | கூடாது (எதிர்மறை ஏவல்) |
| ரஹ் | रह | இரு | | | |

தூ **तू** நீ,
தும் **तुम** நீ, நீர்
ஆப் **आप** நீங்கள், தாங்கள்

ஹிந்தியில் சாதாரணமாக '**तू**' என்னும் சொல் வழங்கப்படுவதில்லை. பன்மைச் சொல்லான '**तुम**' ஒருமையிலும் உபயோகிக்கப் படுகிறது. குழந்தைகளிடத்தும் மிகத் தாழ்ந்தவர்களிடத்தும் பேசும்போதும் கடவுளைத் துதிக்கும் போதும் '**तू**' உபயோகிப்பதுண்டு.

'**तू**' எழுவாயாக வந்தால் வினைப்பகுதியே பயனிலையாகும்.

தூ ஆ
(உ-ம்) **तू आ** = நீ வா.

'**तुम**' எழுவாயாக வரும்போது பயனிலையுடன் '**ओ**' என்ற விகுதி சேர்க்கப் பெறும்.

தும் ஆவோ
(உ-ம்) **तुम आओ** = நீ வா.
தும் ஜாவோ
**तुम जाओ** = நீ போ.

'आप' எழுவாயாக வரும்போது பயனிலையுடன் ' इये ' விகுதி சேர்க்கப்படும்.

(உ-ம்) ஆப் ஆயியே

आप आइये = நீங்கள் வாருங்கள்.

ஆப் ஜாயியே

जाप जाइये = நீங்கள் போங்கள்.

சில வினைச் சொற்களுடன் ' ओ ' ' इये ' விகுதிகள் சேரும் போது அவற்றில் மாற்றமேற்படும்.

(உ-ம்) தே[3]

दे — கொடு.

தும் தோ[3]

तुम दो — நீ கொடு.

ஆப் தீ[3]ஜியே

आप दीजिए — நீங்கள் கொடுங்கள்.

देओ என்பதற்குப் பதிலாக दो என்றும், देइये என்பதற்குப் பதிலாக दीजिए என்றும் மாறும்.

ஏவல் விகுதி சேரும் போது மாற்றமடையும் வினைச் சொற்கள் வருமாறு :—

பீ தும் பியோ ஆப் பீஜியே

पी குடி; तुम पिओ — நீ குடி; आप पीजिए தாங்கள் குடியுங்கள்.

லே தும் லோ ஆப் லீஜியே.

ले எடு; तुम लो — நீ எடு; आप लीजिए தாங்கள் எடுங்கள்.

கர் தும் கரோ ஆப் கீஜியே

**कर** செய் ; **तुम करो**— நீ செய் ; **आप कीजिए** தாங்கள் செய்யுங்கள்.

**வாக்கியங்கள் :**

ரமேஷ், தும் ஆவோ

**रमेश, तुम आओ** — ரமேஷ், நீ வா.

குர்ஸீ பர் பை[3]டே[2]ா

**कुर्सी पर बैठो** — நாற்காலியின் மேல் உட்கார்.

யஹ் கிதாப்[3] படோ[4]

**यह किताब पढो** — இந்தப் புத்தகத்தைப் படி.

உஷா, தும் பீ[4] ஆவோ

**उषा, तुम भी आओ** — உஷா, நீயும் வா.

தும் பீ[4] குர்ஸி பர் பை[3]டோ[2]

**तुम भी कुर्सी पर बैठो** — நீயும் நாற்காலியின் மேல் உட்கார்.

யஹ் கலம் லோ

**यह क़लम लो**—இந்தப் பேனாவை எடுத்துக்கொள்.

காக[3]ஜ் பர் லிகோ[2]

**कागज पर लिखो** — காகிதத்தின் மேல் எழுது.

ராதா[4] தும் அந்த[3]ர் ஜாவோ

**राधा, तुम अंदर जाओ**—ராதா, நீ உள்ளே போ.

ப[2]ல் ஔர் சாய் லாவோ

**फल और चाय लाओ** —பழமும் தேநீரும் [கொண்டு வா.

ஆப் ஆயியே

**आप आइये** — நீங்கள் வாருங்கள்.

யஹான் பை$^{3}$டி$^{2}$யே

**यहाँ बैठिये** — இங்கே உட்காருங்கள்.

ப$^{2}$ல் கா$^{2}$யியே

**फल खाइये** — பழம் சாப்பிடுங்கள்.

சாய் பீஜியே

**चाय पीजिए** — தேநீர் அருந்துங்கள்.

வஹ் காம் மத் கீஜியே

**वह काम मत कीजिए** — அந்த வேலையைச் செய்யாதீர்கள்.

யஹ் தே$^{3}$கி$^{2}$யே.

**यह देखिए** — இதைப் பாருங்கள்.

கமலா, ஆவோ

**कमला, आओ** — கமலா, வா.

யஹான் ரஹோ

**यहाँ रहो** — இங்கே இரு.

வஹான் மத் ஜாவோ

**वहाँ मत जाओ** — அங்கே போகாதே.

## 7. வினைச் சொல்—நிகழ்காலம்

மைன் **मैं** — நான்

ஹம் **हम**—நாங்கள், நாம்

தூ **तू** — நீ

தும் **तुम**—நீ, நீர்

ஆப் **आप**—நீங்கள், தாங்கள்

வஹ் **वह**—அவன், அவள், அது

யஹ் **यह**—இவன், இவள், இது

வே **वे** — அவர், அவர்கள், அவை

யே **ये** — இவர், இவர்கள், இவை

**वे, ये** இவ்விரண்டும் ஒருமையில் மரியாதையைக் காண்பிக்கவும் வழங்கப் படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மைன் | ஹூன் | **मैं हूँ** | ஹம் | ஹைன் | **हम हैं** |
| தூ | ஹை | **तू है** | தும் | ஹோ | **तुम हो** |
| வஹ் | ஹை | **वह है** | ஆப் | ஹைன் | **आप हैं** |
| யஹ் | ஹை | **यह है** | வே | ஹைன் | **वे हैं** |
| | | | யே | ஹைன் | **ये हैं** |

'**है**' என்பது 'இருக்கிறது' என்ற பொருளைத் தரும் முக்கியமான வினைச் சொல். தவிர இது ஒவ்வொரு வினைச் சொல்லுடனும் நிகழ்காலத்தைக் காட்டும் விகுதியைப் போன்றும் வரும்.

நிகழ்கால வாக்கியங்களில் வினைப்பகுதியுடன் '**ता**' சேர்ந்து அதன் பின் '**है**' அல்லது மேற்கண்டவாறு அதன் எண், பால் இவற்றிற்குரிய வேறுபாடுகள் அடுத்து வரும்.

### (உம்) ஆண்பால் ஒருமை

மைன் ஜாதா ஹூன் **मैं जाता हूँ** — நான் போகிறேன்.
தூ ஜாதா ஹை **तू जाता है** — நீ போகிறாய்.
வஹ் ஜாதா ஹை **वह जाता है** — அவன் போகிறான்.
யஹ் ஜாதா ஹை **यह जाता है** — அவன் போகிறான்.

ஒருமையில் '**ता**' என்று வரும் விகுதி பன்மையில் '**ते**' எனவும், பெண்பாலில் ஒருமை பன்மை இரண்டிலும் '**ती**' எனவும் வரும்.

### ஆண்பால் பன்மை

ஹம் ஜாதே ஹைன் **हम जाते हैं**—நாங்கள் போகிறோம்.
தும் ஜாதே ஹோ **तुम जाते हो**—நீ போகிறாய்.

ஆப் ஜாதே ஹைன் **आप जाते हैं** தாங்கள் போகிறீர்கள்.
வே ஜாதே ஹைன் **वे जाते हैं** அவர்கள் போகிறார்கள்.
யே ஜாதே ஹைன் **ये जाते हैं** இவர்கள் போகிறார்கள்.

**பெண்பால்**

| ஒருமை | பன்மை |
|---|---|
| मैं आती हूँ | हम आती हैं |
| तू आती है | तुम आती हो |
| | आप आती हैं |
| वह आती है | वे आती हैं |
| यह आती है | ये आती हैं |

பெண்பாலுக்குரிய விகுதியான '**ती**' என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் ஒருமை, பன்மை இரு எண்களிலும் மாற்றமின்றி வருவதைக் காண்க.

'**मत**' '**नहीं**' என்ற எதிர்மறைச் சொற்கள் வேண்டாம், இல்லை என்ற பொருளைத் தருவன. வாக்கியத்தில் இவை வினைச் சொல்லுக்கு முன் வரும். எதிர் மறைச் சொற்கள் வரும் வாக்கியங்களில் **हूँ, है, हैं, हो** இவை விடப்படும்.

(உ-ம்) மைன் ஸினேமா நஹீ தே³க்²தா.

मैं सिनेमा नही देखता ।

வஹ் சாய் நஹீ பீதா

वह चाय नही पीता ।

## நிகழ் கால வாக்கியங்கள்

மைன் பாட்$^{2}$ பட்$^{4}$தா ஹூன்

मैं पाठ पढता हूँ । நான் பாடம் படிக்கிறேன்.

தும் கீ$^{3}$த் ஸுன்தே ஹோ

तुम गीत सुनते हो । நீ பாட்டுக் கேட்கிறாய்.

வஹ் க$^{2}$த் லிக்$^{2}$தா ஹை

वह खत लिखता है । அவன் கடிதம் எழுதுகிறான்.

ஹம் தமாஷா தே$^{3}$க்$^{2}$தே ஹைன்.

हम तमाशा देखते हैं। நாங்கள் வேடிக்கை பார்க்கிறோம்.

தும் க்யா கர்தே ஹோ ?

तुम क्या करते हो । நீ என்ன செய்கிறாய் ?

மைன் காம் கர்தா ஹூன்

मैं काम करता हूँ । நான் வேலை செய்கிறேன்.

வே யஹான் ஆதே ஹைன்

वे यहाँ आते हैं । அவர்கள் இங்கே வருகிறார்கள்.

மைன் குர்ஸீ பர் பை$^{3}$ட்$^{2}$தா ஹூன்

मैं कुर्सी पर बैठता हूँ । நான் நாற்காலியின்
[மேல் உட்கார்கிறேன்.

தூ கஹான் ஜாதா ஹை

तू कहाँ जाता है ? நீ எங்கே போகிறாய் ?

ஆப் க்யா தே$^{3}$க்$^{2}$தே ஹைன்

आप क्या देखते हैं ? நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?

மைன் தஸ்வீர் தே³க்²தா ஹூன்

मैं तस्वीर देखता हूँ। நான் படத்தைப் [பார்க்கிறேன்.

ஷங்கர், தும் கஹான் ஜாதே ஹோ?

शंकर, तुम कहाँ जाते हो? சங்கர், நீ எங்கே [போகிருய்?

மைன் பாட்²ஷாலா ஜாதா ஹூன்

मैं पाठशाला जाता हूँ। நான் பள்ளிக்கூடம் [போகிறேன்.

யே கௌன் ஹைன்

ये कौन हैं? இவர் யார்?

யே பண்டி³த்ஜீ ஹைன்

ये पंडितजी हैं। இவர் பண்டிட்ஜீ.

பண்டி³த்ஜீ ஆயியே, யஹான் பை³டி²யே

पंडितजी आइये, यहाँ बैठिये। பண்டிட்ஜீ [வாருங்கள், இங்கே உட்காருங்கள்.

யஹ் தூ³த்⁴ பீஜியே

यह दूध पीजिए। இந்தப் பாலை அருந்துங்கள்.

மைன் தூ³த்⁴ நஹீன் பீதா

मैं दूध नहीं पीता। நான் பால் குடிப்பதில்லை.

உஷா ஆதி ஹை

उषा आती है। உஷா வருகிருள்.

வஹ் க்யா லாதி ஹை?

वह क्या लाती है? அவள் என்ன கொண்டு [வருகிருள்?

வஹ் ரோடீ ஔர் தூ$^{3}$த்$^{4}$ லாதீ ஹை.

वह रोटी और दूध लाती है। அவள் ரொட்டியும் [பாலும் கொண்டு வருகிறாள்.

ஹம் ரோடீ கா$^{2}$தே ஹைன் ஔர் தூ$^{3}$த்$^{4}$ பீதே ஹைன்

हम रोटी खाते हैं और दूध पीते हैं।

நாங்கள் ரொட்டி சாப்பிட்டுப் பாலை அருந்துகிறோம்.

வஹ் ரோடீ நஹீன் கா$^{2}$தா

वह रोटी नहीं खाता। அவன் ரொட்டி சாப்பிடு [வதில்லை.

தும் கஹான் ரஹ்தே ஹோ ?

तुम कहाँ रहते हो? நீ எங்கே இருக்கிறாய் ?

மைன் திருவல்லிக்கேணீ மேன் ரஹ்தா ஹூன்.

मैं तिरुवल्लिक्कणी में रहता हूँ।

நான் திருவல்லிக்கேணியில் இருக்கிறேன்.

ராத$^{4}$ா தும் கஹான் ஜாதீ ஹோ ?

राधा तुम कहाँ जाती हो? ராதா, நீ எங்கே [போகிறாய் ?

மைன் ஹிந்தீ$^{3}$ வித்$^{3}$யாலய் ஜாதீ ஹூன்.

मैं हिन्दी विद्यालय जाती हूँ। நான் ஹிந்தி வித்தி [யாலயத்திற்குப் போகிறேன்.

தும்கோ கௌன் ஹிந்தீ$^{3}$ பட$^{4}$ாதே ஹைன் ?

तुम कौन हिन्दी पढाते हैं? உனக்கு யார் [ஹிந்தி கற்பிக்கிறார்கள் ?

ஹம்கோ மாஸ்டர்ஜீ ஹிந்தி[3] படா[4]தே ஹைன்.

हमको मास्टरजी हिन्दी पढाते हैं।

எங்களுக்கு மாஸ்டர்ஜீ ஹிந்தி கற்பிக்கிறார்.

ஸுதா[4] க்யா கர்தீ ஹை?

सुधा क्या करती है? ஸுதா என்ன செய்கிறாள்?

ஸுதா[4] பீ[4] ஹிந்தி[3] பட்[4]தீ ஹை.

सुधा भी हिन्दी पढती है। ஸுதாவும் ஹிந்தி [படிக்கிறாள்.

## 8. கேள்விச் சொற்கள்

| | |
|---|---|
| க்யா क्या — என்ன | கப்[3] कब—எப்பொழுது |
| கௌன் कौन — யார் | கைஸே कैसे—எப்படி |
| கஹான் कहाँ — எங்கே | கித்னா कितना—எவ்வளவு |
| க்யோன் क्यों — ஏன் | கித்னே कितने—எத்தனை |

வாக்கியத்தின் துவக்கத்தில் 'क्या' என்பதைச் சேர்த்தால் அது கேள்வியாகும்.

(உ-ம்) तुम विद्यालय जाते हो।

क्या तुम विद्यालय जाते हो?

'क्या' என்ற சொல் சில சமயங்களில் விட்டு விடப்படுவதுமுண்டு. அப்போது வாக்கியத்தின் கடைசிச் சொல்லைக் கேள்விக்குரலில் சொல்வதால் மட்டுமே அது கேள்வி என்று தெரியவரும். எழுதும் போது அவ் வாக்கியத்தின் இறுதியில் கேள்விக்குறி இடவேண்டும்.

(உ-ம்) तुम विद्यालय जाते हो?

### வாக்கியங்கள்

*க்யா, தும் ரோடீ கா²தே ஹோ ?*

क्या तुम रोटी खाते हो? *நீ ரொட்டி சாப்பிடுகிருயா?*

*ஆப் ஸினேமா ஜாதே ஹைன் ?*

आप सिनेमा जाते हैं? *தாங்கள் ஸினிமாவுக்குப் [போகிறீர்களா ?*

*வஹ லட்³கீ கௌன் ஹை?*

वह लड़की कौन है? *அந்தப் பெண் யார்?*

*அருண், தும் கஹான் ஜாதே ஹோ ?*

अरुण, तुम कहाँ जाते हो? *அருண், நீ எங்கே போகிருய்?*

*தும் க்யோன் ஜமீன் பர் பை³ட்²தே ஹோ ?*

तुम क्यों ज़मीन पर बैठते हो? *நீ ஏன் தரை [மேல் உட்காருகிருய் ?*

*ஆப் கப்³ ப³ம்ப³யீ ஜாதே ஹைன் ?*

आप कब बंबई जाते हैं? *நீங்கள் எப்போது [பம்பாய்க்குப் போகிறீர்கள்?*

*ராமூ ரோஜ் கித்னே ப³ஜே ஸ்கூல் ஜாதா ஹை ?*

रामू रोज़ कितने बजे स्कूल जाता है? 
*ராமு தினமும் எத்தனை மணிக்குப் பள்ளிக்கூடம் [போகிருன்?*

*வஹ கைஸே ஸ்கூல் ஜாதா ஹை ?*

वह कैसे स्कूल जाता है? *அவன் எப்படி [ஸ்கூலுக்குப் போகிருன்?*

வஹ் கித்ந கா²தா ஹை ?

वह कितना खाता है ? அவன் எவ்வளவு சாப்பிடு
[கிறன் ?

க்யா ராதா⁴ கா³தி ஹை ?

क्या राधा गाती है ? ராதா பாடுகிறளா ?

யஹ் கா³ய் கித்ந தூ³த்⁴ தே³தீ ஹை ?

यह गाय कितना दूध देती है ? இந்தப் பசு எவ்
[வளவு பால் தருகிறது ?

## 9. தொடர் நிகழ்கால வாக்கியங்கள்

ஒரு வினை அல்லது செயல் முடிந்துவிடாமல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதைக் குறிப்பதற்கு நிகழ்கால வாக்கியத்தின் வினைப் பகுதியுடன் 'கொண்டு' என்ற பொருளைத் தரும் 'रहा' என்னும் சொல்லைச் சேர்க்க வேண்டும்.

(உ-ம்) மைன் ஆதா ஹூன்

मैं आता हूँ। நான் வருகிறேன்.

மைன் ஆ ரஹா ஹூன்

मैं आ रहा हूँ। நான் வந்துகொண்
[டிருக்கிறேன்.

ஆண்பால் ஒருமையில் 'रहा' என்றிருப்பது பன்மையில் 'रहे' என்றாகும்.

| ஆ. பா. ஒருமை | ஆ. பா. பன்மை |
| --- | --- |
| मैं आ रहा हूँ। | तुम आ रहे हो। |
| तू आ रहा है। | आप आ रहे हैं। |
| वह आ रहा है। | वे आ रहे हैं। |
| यह आ रहा है। | ये आ रहे हैं। |
| | हम आ रहे हैं। |

பெண்பாலில் தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடங்களிலும் ஒருமை பன்மை இரு எண்களிலும் '**रही**' என்றே இருக்கும்.

| | |
| --- | --- |
| मैं आ रही हूँ। | तुम आ रही हो |
| तू आ रही है। | आप आ रही हैं। |
| वह आ रही है। | वे आ रही हैं। |
| यह आ रही है। | ये आ रही हैं। |
| | हम आ रही हैं। |

சில புதிய சொற்கள் :—

| | |
| --- | --- |
| ரஸோயீ **रसोई** சமையல் | ப$^{3}$ரஸ் **बरस** (மழை) பெய் |
| க$^{3}$ாடீ$^{3}$ **गाडी** வண்டி | ஹிஸாப்$^{3}$ லகா$^{3}$ **हिसाबलगा** [கணக்குப் போட |
| மந்தி$^{3}$ர் **मंदिर** கோயில் | கே ஸாத்$^{2}$ **के साथ** கூட |
| நௌகரீ **नौकरी** வேலை | தூ$^{3}$த்$^{4}$வாலா **दूधवाला** பால்காரன் |

**வாக்கியங்கள்**

ரமேஷ் ரோடீ கா$^{2}$ ரஹா ஹை.

**रमेश रोटी खा रहा है।**

ரமேஷ் ரொட்டி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்,

ஸதீஷ் ஸோ ரஹா ஹை.

सतीश सो रहा है।

ஸதீஷ் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

அருணா சிட்டி லிக்[2] ரஹீ ஹை.

अरुणा चिट्ठी लिख रही है।

அருணா கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறாள்.

தும் க்யா ஸோச் ரஹே ஹோ?

तुम क्या सोच रहे हो?

நீ என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?

தூ[3]த்[4]வாலா தூ[3]த்[4] லா ரஹா ஹை.

दूधवाला दूध ला रहा है।

பால்காரன் பால் கொண்டுவந்து கொண்டிருக்கிறான்.

ஹம் ஆஜ் ஸினேமா ஜா ரஹே ஹைன்.

हम आज सिनेमा जा रहे हैं।

நாங்கள் இன்று ஸினிமாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.

பிதாஜீ காம் கர் ரஹே ஹைன்.

पिताजी काम कर रहे हैं।

தகப்பனார் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

ஸரலா கப்டே[3] ஸீ ரஹீ ஹை.

सरला कपडे सी रही है।

ஸரளா துணி தைத்துக் கொண்டிருக்கிறாள்.

மான் ரஸோயீ பனா ரஹீ ஹை.

माँ रसोई बना रही है।

அம்மா சமையல் செய்து கொண்டிருக்கிறாள்.

ஹம் ஹிந்தீ³ ஸீக்² ரஹே ஹைன்.
हम हिन्दी सीख रहे हैं।
நாங்கள் ஹிந்தி கற்றுக் கொண்டிருக்கிறோம்.
ஆப் க்யா தேக்² ரஹே ஹைன் ?
आप क्या देख रहे हैं?
தாங்கள் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ?
ஸீதா கா³ ரஹீ ஹை.
सीता गा रही है।
ஸீதை பாடிக் கொண்டிருக்கிறாள்.
தும் கஹான் ஸே ஆ ரஹே ஹோ ?
तुम कहाँ से आ रहे हो?
நீ எங்கிருந்து வந்து கொண்டிருக்கிறாய் ?
வஹ் ஆத்³மீ ப²ல் பே³ச் ரஹா ஹை.
वह आदमी फल बेच रहा है।
அந்த மனிதன் பழம் விற்றுக் கொண்டிருக்கிறான்.
வே சாய் பீ ரஹே ஹைன்.
वे चाय पी रहे हैं।
அவர்கள் தேநீர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 10. பெயர்ச் சொற்களும் பெயர் உரிச் சொற்களும்

பெயர்ச் சொற்கள் :—

லட்³கா लडका பையன்
லட்³கி लडकी பெண்
ஆத்³மீ अदमी மனிதன்
ஔரத் औरत ஸ்த்ரீ
ப⁴ாயீ भाई சகோதரன்
ப³ஹன் बहन சகோதரி.

கோ⁴டா³ घोडा குதிரை
ஹாதி² हाथी யானை
பி³ல்லீ बिल्ली பூனை
குத்தா कुत्ता நாய்

### பெயர் உரிச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| படா | बड़ा | பெரிய | தங்க்3 | तंग | குறுகிய |
| சோ2டா | छोटा | சிறிய | செளடா | चौड़ा | அகலமான |
| து3ப்3லா | दुबला | மெலிந்த | அச்சா2 | अच्छा | நல்ல |
| மோடா | मोटा | பருமனான | பு3ரா | बुरा | கெட்ட |
| க3ந்தா3 | गंदा | அழுக்கான | காலா | काला | கறுப்பான |
| ஸாப்2 | साफ़ | சுத்தமான | ஸபே2த்3 | सफ़ेद | வெண்மையான |

ஹிந்தியில் பால் இரு வகைப்படும்: ஆண்பால், பெண்பால். உயர்திணைப் பெயர்ச் சொற்கள் தமிழில் போலவே ஹிந்தியிலும் இரு பாலில் அடங்கும். மேலும் தமிழில் இல்லாத ஓர் புதுமை ஹிந்தியில் காணலாம். அஃறிணைச் சொற்களும் அவற்றின் உருவத்தை யொட்டி ஆண், பெண்பாலாக நிர்ணயிக்கப்பெற்றுள்ளன. சாதாரணமாக 'अ' 'आ' வில் முடியும் பெயர்ச் சொற்கள் ஆண்பாலாகவும், 'ई' யில் முடிவன பெண்பாலாகவும் அமையும்.

(உ - ம்)

| | | | |
|---|---|---|---|
| மேஜ்3 | मेज़ | — மேஜை | ஆண்பால். |
| கம்ரா | कमरा | — அறை | ஆண்பால். |
| குர்ஸீ | कुर्सी | — நாற்காலி | பெண்பால். |
| க4டி3 | घडी | — கடிகாரம் | பெண்பால். |

சில விதி விலக்குகளும் உண்டு. வேறிடத்தில் அவை பற்றி விவரமாய்க் காணலாம்.

'आ' வில் முடியும் ஆண்பால் பெயர்ச்சொற்கள் பன்மையில் 'ए' என்ற முடிவைப் பெறும்.

(உ-ம்)

கோ⁴டா³ — घोडा குதிரை கோ⁴டே³ – घोडे குதிரைகள்
குத்தா — कुत्ता நாய் குத்தே – कुत्ते நாய்கள்.

'आ' வில் முடியும் பெயர்ச் சொற்கள் தவிர மற்ற ஆண்பால் ஒருமைச் சொற்கள் பன்மையில் மாறுவதில்லை.

(உ-ம்) க⁴ர் घर — வீடு, வீடுகள்
ப²ல் फल — பழம், பழங்கள்

தமிழில் பெயர் உரிச் சொற்கள் பெயர்ச் சோற்களுக்கு முன்பு வருவதை நீங்கள் அறிவீர்கள். ஹிந்தியிலும் அவ்வாறே வரும்.

(உ-ம்) அச்சா² கோ⁴டா³ अच्छा घोडा நல்ல குதிரை

பெயர் உரிச் சொற்கள், தம்மை அடுத்து வரும் பெயர்ச் சொற்களின் எண்ணையும் பாலையும் தழுவி அவற்றிற்கேற்ப மாறி வரும்.

(உ-ம்) அச்ச²ா லட்³கா अच्छा लडका நல்ல பையன்
அச்சே² லட்³கே अच्छे लडके நல்ல பையன்கள்
அச்சீ² லட்³கீ अच्छी लडकी நல்ல பெண்.

**வாக்கியங்கள்**

ரமேஷ் அச்சா² லட்³கா ஹை.

**रमेश अच्छा लडका है।**

ரமேஷ் நல்ல பையன்.

யஹ் சோ$^2$டீ லட்$^3$கீ மேரீ ப$^3$ஹன் ஹை.

यह छोटी लडकी मेरी बहन है।

இந்தச் சிறிய பெண் என்னுடைய சகோதரி.

வஹான் ஆம் கே சார் ப$^3$டே$^3$ பேட்$^3$ ஹைன்.

वहाँ आम के चार बडे पेड हैं।

அங்கே நான்கு பெரிய மாமரங்கள் இருக்கின்றன.

ஹம் மீடே$^2$ ப$^2$ல் கா$^2$தே ஹைன்.

हम मीठे फल खाते हैं।

நாங்கள் இனிப்பான பழங்களைச் சாப்பிடுகிறோம்.

தி$^3$ல்லீ ப$^3$டா$^3$ ஷஹர் ஹை.

दिल्ली बडा शहर है।

டில்லி பெரிய நகரம்.

ஆவ்டி$^3$ ஏக் சோ$^2$டா கா$^3$வ் ஹை.

आवडी एक छोटा गाँव है।

ஆவடி ஒரு சிறிய கிராமம்.

மாவுண்ட் ரோட்$^3$ ஏக் சௌடீ$^3$ ஸட$^3$க் ஹை.

माऊंट रोड एक चौडी सडक है।

மவுண்ட் ரோட் ஒரு அகலமான சாலை.

யஹ் க$^3$லீ தங்க்$^3$ ஹை.

यह गली तंग है।

இந்தத் தெரு குறுகலானது.

லதா ஔர் உமா அச்சி$^{2}$ லட்$^{3}$கியான் ஹைன்.

लता और उमा अच्छी लड़कियाँ हैं।

லதாவும் உமாவும் நல்ல பெண்கள்.

ராம்லால் து$^{3}$ப்$^{3}$லே ஆத்$^{3}$மீ ஹைன்.

रामलाल दुबले आदमी हैं।

ராமலால் மெலிந்த மனிதர்.

வஹ் டீ$^{2}$க் பாஞ்ச் ப$^{3}$ஜே ஆதா ஹை.

वह ठीक पाँच बजे आता है।

அவன் சரியாக ஐந்து மணிக்கு வருகிறான்.

யஹ் பி$^{3}$ல்லீ காலீ ஹை.

यह बिल्ली काली है।

இந்தப் பூனை கறுப்பாக இருக்கிறது.

தா$^{3}$தா$^{3}$ கே பா$^{3}$ல் ஸபே$^{2}$த்$^{3}$ ஹைன்.

दादा के बाल सफ़ेद हैं।

தாத்தாவின் தலை மயிர் வெளுப்பாக இருக்கிறது.

ஹிமாலய் பஹாட்$^{3}$ ஊஞ்சா ஹை.

हिमालय पहाड ऊँचा है।

இமய மலை உயரமானது.

க$^{2}$த்$^{3}$த$^{3}$ர் மோடா ஹை.

खद्दर मोटा है।

கதர்த்துணி தடிப்பானது.

ஹம் க$^{3}$ந்தே$^{3}$ கப்டே$^{3}$ நஹீன் பஹன்தே.

हम गंदे कपडे नहीं पहनते।

நாங்கள் அழுக்கான துணி உடுத்தமாட்டோம்.

ஹமாரா க$^4$ர் ஸாப்$^2$ ஹை.

**हमारा घर साफ़ है।**

எங்கள் வீடு சுத்தமாயிருக்கிறது.

ராதா$^4$ அந்த$^3$ர் ஜாவோ ஔர் ட$^2$ண்ட$^3$ா பானீ லாவோ.

**राधा, अंदर जाओ और ठंडा पानी लाओ।**

ராதா, உள்ளே போய்க் குளிர்ந்த நீர் கொண்டுவா.

ஹிந்தி$^3$ ஆஸான் ப$^4$ாஷா ஹை.

**हिन्दी आसान भाषा है।**

ஹிந்தி சுலபமான பாஷை.

கேலா ஸஸ்தா ப$^2$ல் ஹை.

**केला सस्ता फल है।**

வாழைப்பழம் மலிவானது.

வஹ் லால் ஸ்யாஹீ ஸே லிக்$^2$தா ஹை.

**वह लाल स्याही से लिखता है।**

அவன் சிவப்பு மையால் எழுதுகிறான்.

யஹ் லட்$^3$கா ப$^3$ஹுத் மோடா$^2$ ஹை.

**यह लडका बहुत मोटा है।**

இந்தப் பையன் மிகவும் பருமனாக இருக்கிறான்.

ஹாதீ$^2$ பட$^3$ா ஜான்வர் ஹை.

**हाथी बडा जानवर है।**

யானை பெரிய மிருகம்.

## 11. வேற்றுமை

தமிழைப் போன்று ஹிந்தியிலும் எட்டு வேற்றுமைகள் உள்ளன. முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. ஏனைய வேற்றுமை உருபுகள் வருமாறு :

| வேற்றுமை | உருபு | மாதிரி |
| --- | --- | --- |
| 1. | — | गोविंद |
| 2. ஐ | को | गोविंद को கோவிந்தனை |
| 3. ஆல், ஒடு, உடன் | से | गोविंद से கோவிந்தனால் |
| 4. கு | को | गोविंद को கோவிந்தனுக்கு |
| 5. இருந்து, காட்டிலும் | से | गोविंद से கோவிந்தனிடமிருந்து, கோவிந்தனைக் காட்டிலும். |
| 6. உடைய | का, के, की | गोविंद का, ,, के, ,, की — கோவிந்தனுடைய |
| 7. இல், மேல் | में, पर | घर में வீட்டில்<br>कुर्सी पर நாற்காலி மேல் |
| 8. | हे, अरे | हे शंकर ! ஏ சங்கர் !<br>अरे रामू ! அடே ராமூ ! |

ஹிந்தியில் ஐந்து வேற்றுமை உருபுகளே ஏழு வேற்றுமை உருபுகளாகச் செயல் படுவதைக் காண்க.

இரண்டாம் வேற்றுமை உருபு உயர் திணைகளுக்கு மட்டுமே உபயோகப் படுத்தப்படும். மற்றவற்றில் தொக்கு நிற்கும்.

(உ-ம்) एक लड़के को बुलाओ-ஒரு பையனைக் கூப்பிடு.

भाई को देख - சகோதரனைப் பார்.

एक किताब लाओ - ஒரு புத்தகம் கொண்டுவா.

पानी पीओ - தண்ணீர் குடி.

பின்னிரு வாக்கியங்களிலும் (தமிழ், ஹிந்தி இரண்டிலும் முறையே ஐ, को) இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்பதைக் காண்க.

**சில புதிய சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ருப்யா | रुपया | ரூபாய் | பஸந்த்³ | पसंद | விருப்பமான, பிரியமான |
| பீ³மார் | बीमार | நோயாளியான | வேதன் | वेतन | சம்பளம் |
| ஸுப³ஹ் | सुबह | காலை | தீ³வார் | दीवार | சுவர் |
| ஷாம் | शाम | மாலை | நதீ³ | नदी | நதி, ஆறு |
| தி³ன் | दिन | பகல்; நாள் | பைஸா | पैसा | காசு |
| ராத் | रात | இரவு | ஜேப்³ | जेब | சட்டைப்பை |
| பே³டா | बेटा | மகன் | ப³ந்த³ர் | बंदर | குரங்கு |
| பே³டீ | बेटी | மகள் | த³ர்ஜா | दर्जा | வகுப்பு |
| டஹல்னா | टहलना | உலாவ | | | |

**வாக்கியங்கள்**

ஷேக²ர் கோ பு³லாவோ

शेखर को बुलाओ ।

சேகரனைக் கூப்பிடு.

ஹம் ஆங்கோ²ன் ஸே தே³க்²தே ஹைன்.

हम आँखों से देखते हैं ।

நாம் கண்களால் பார்க்கிறோம்.

பிதாஜீ அபீ⁴ ஷஹர் ஸே ஆதே ஹைன்.

पिताजी अभी शहर से आते हैं ।

தந்தை இப்போதுதான் நகரத்திலிருந்து வருகிறார்.

மைன் பு³த்⁴வார் ஸே யஹான் ரஹ்தா ஹூன்.

मैं बुधवार से यहाँ रहता हूँ ।

நான் புதன் கிழமையிலிருந்து இங்கே இருக்கிறேன்.

தும் அப்னே நௌகர் கோ க்யா வேதன் தே³தே ஹோ?
तुम अपने नौकर को क्या वतन देते हो?
நீ உன் வேலைக்காரனுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறாய்?

யஹ் கிதாப்³ தும்ஹாரீ ப³ஹன் கே லியே ஹை.
यह किताब तुम्हारी बहन के लिए है।
இந்தப் புத்தகம் உன்னுடைய சகோதரிக்காக.

நஹீன், தும் ஸரலா கோ யஹ் கிதாப்³ தோ³.
नहीं, तुम सरला को यह किताब दो।
இல்லை, நீ ஸரளாவுக்கு இந்தப் புத்தகத்தைக் கொடு.

யஹ் க⁴ர் கிஸ்கா ஹை?
यह घर किसका है?
இந்த வீடு யாருடையது?

யஹ் கோ³பால் கா க⁴ர் ஹை.
यह गोपाल का घर है।
இது கோபாலனின் வீடு.

ஸுரேஷ் நரேஷ் கா பா⁴யீ ஹை.
सुरेश नरेश का भाई है।
ஸுரேஷ் நரேஷுடைய சகோதரன்.

நரேஷ் கே தோ³ பா⁴யீ பட⁴தே ஹைன்.
नरेश के दो भाई पढते हैं।
நரேஷுடைய இரு சகோதரர்களும் படிக்கிறார்கள்.

லலிதா நரேஷ் கீ சோ²டீ ப³ஹன் ஹை.
ललिता नरेश की छोटी बहन है।
லலிதா நரேஷுடைய சிறிய சகோதரி.

க$^{4}$ர் மேன் கௌன் ஹைன் ?

घर में कौन हैं ?

வீட்டில் யார் இருக்கிறார்கள் ?

க$^{4}$ர் மேன் மான் - பா$^{3}$ப் ஹைன்.

घर में मां - बाप हैं ।

வீட்டில் பெற்றோர் இருக்கிறார்கள்.

க$^{4}$டீ தீ$^{3}$வார் பர் ஹை.

घडी दीवार पर है ।

கடிகாரம் சுவரின்மேல் இருக்கிறது.

மேஜ் பர் கிதாபே$^{3}$ன் ஹைன்.

मेज़ पर किताबें हैं ।

மேஜை மேல் புத்தகங்கள் இருக்கின்றன.

மைன் ஸுப$^{3}$ஹ் ஔர் ஷாம் டஹல்னே ஜாதா ஹூன்.

मैं सुबह और शाम टहलने जाता हूँ ।

நான் காலையும் மாலையும் உலாவப் போகிறேன்.

ப$^{3}$ந்த$^{3}$ர் கோ கேலா பஸந்த் ஹை.

बंदर को केला पसंद है ।

குரங்குக்கு வாழைப் பழம் பிரியமானது.

ராம்லால் கா பே$^{3}$டா மேரே த$^{3}$ர்ஜே மேன் பட$^{4}$தா ஹை.

रामलाल का बेटा मेरे दर्जे में पढता है ।

ராம்லாலின் மகன் என் வகுப்பில் படிக்கிறான்.

கோ$^{3}$பால் கீ பே$^{3}$டீ அச்சா$^{2}$ கா$^{3}$தீ ஹை.

गोपाल की बेटी अच्छा गाती है ।

கோபாலின் மகள் நன்றாகப் பாடுகிறாள்.

ஹம் நதீ[3] கா பானீ பீதே ஹைன்.

**हम नदी का पानी पीते हैं।**

நாங்கள் ஆற்று நீரைக் குடிக்கிறோம்.

மேற்கண்ட வாக்கியங்களில் ஆறும் வேற்றுமை உருபு வந்துள்ள வாக்கியங்களைக் கவனித்துப் பாருங்கள். ஆறும் வேற்றுமை உருபான '**का**' என்பது அதற்குப் பின் வருகிற பெயர்ச் சொல்லின் எண்ணுக்கும் பாலுக்கும் தக்கபடி '**के**', '**की**' என மாறுவதைக் காணலாம்.

(1) வேற்றுமை உருபை அடுத்து வரும் பெயர்ச் சொல் ஆண்பால் ஒருமையானல் '**का**' என்னும் உருபு உபயோகிக்கப்படும்.

(உ-ம்) **गोपाल का घर** கோபாலின் வீடு.
**नरेश का भाई** நரேஷின் சகோதரன்.

(2) அடுத்து வரும் பெயர்ச் சொல் ஆண்பால் பன்மையானல் '**के**' உபயோகிக்கப்படும்.

(உ-ம்) **नरेश के भाई** நரேஷின் சகோதரர்கள்.

(3) அடுத்து வரும் பெயர்ச் சொல் பெண்பால் ஒருமையாகவோ பன்மையாகவோ இருந்தால் '**की**' என்ற உருபு அமையும்.

(உ-ம்) **नरेश की छोटी बहन** நரேஷின் சிறிய சகோதரி.
**सुंदर की किताबें** ஸுந்தரின் புத்தகங்கள்.

தவிர, ஆறும் வேற்றுமை உருபை அடுத்து வரும் பெயர்ச் சொல் ஆண்பால் ஒருமையாயிருந்து அதனுடன் வேற்றுமை உருபு கலந்திருந்தால் முன் நிற்கும் ஆறும் வேற்றுமை உருபாகிய '**का**', '**के**' என்று மாறும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-600 008
102767

(உ-ம்) **गोपाल के घर में** கோபாலனுடைய வீட்டில்.
**लक्ष्मी के भाई से** லக்ஷ்மியின் சகோதரனிட மிருந்து.

ஆறும் வேற்றுமை உருபு அமைந்த சில வாக்கியங் கள் வருமாறு :—

யஹ் மேரா க$^4$ர் ஹை.
यह मेरा घर है।
இது என்னுடைய வீடு.

ராஜா த$^3$ஷரத்$^2$ கே சார் பே$^3$டே ஹைன்.
राजा दशरथ के चार बेटे हैं।
ராஜா தசரதனின் பிள்ளைகள் நால்வர்.

நலினி ஷங்கர் கீ ப$^3$ஹன் ஹை.
नलिनी शंकर की बहन है।
நளினி சங்கரனுடைய சகோதரி.

யே ஷங்கர் கீ கிதாபே$^3$ன் ஹைன்.
ये शंकर की किताबें हैं।
இவை சங்கரனின் புத்தகங்கள்.

ஸதீஷ் ஷங்கர் கா பா$^4$யீ ஹை.
सतीश शंकर का भाई है।
ஸதீஷ் சங்கரனின் சகோதரன்.

ஸதீஷ் ஔர் ஷங்கர் நலினி கே பா$^4$யீ ஹைன்.
सतीश और शंकर नलिनी के भाई हैं।
ஸதீஷும் சங்கரனும் நளினியின் சகோதரர்கள்.

கோ$^{3}$பால் கே க$^{4}$ர் மேன் ஏக் கா$^{3}$ய

गोपाल के घर में एक गाय

கோபாலனின் வீட்டில் ஒரு பசு இருக்கி

லக்ஷ்மீ கே க$^{4}$ர் ஸே யஹ் கிதாப்$^{3}$ லாதீ ஹூ-ன.

लक्ष्मी के घर से यह किताब लाती हूँ।

லக்ஷ்மியின் வீட்டிலிருந்து இந்தப் புத்தகம் கொண்டு வருகிறேன்.

## 12. இடைச் சொற்கள்

இரு சொற்களுக்கு இடையே வந்து அவற்றை இணைத்துப் பொருளைத் தெளிவாக்குபவை இடைச் சொற்கள். இச்சொற்களின் முன்னால் के என்ற உருபு வரும். சில இடைச்சொற்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| கே அந்த$^{3}$ர் | के अंदर | உள்ளே |
| கே பா$^{3}$ஹர் | के बाहर | வெளியே |
| கே ஊபர் | के ऊपर | மேலே |
| கே நீசே | के नीचे | கீழே |
| கே ஸாத்$^{3}$ | के साथ | ஓடு, உடன் |
| கே பி$^{3}$னா | के बिना | இன்றி; இல்லாமல் |
| கே லியே, கே வாஸ்தே | के लिए, के वास्ते | ஆக |
| கே பாஸ் | के पास | இடத்தில் |
| கே பாஸ் | के पास | அருகில் |
| கே ஸாம்னே | के सामने | எதிரே, முன்பாக |
| கே பஹ்லே | के पहले | முன்னால் |
| கே பா$^{3}$த்$^{3}$ | के बाद | பிறகு |
| கே யஹான் | के यहाँ | இருப்பிடத்தில்; வீட்டில் |

| | | |
|---|---|---|
| கே ஸிவாய் | **के सिवाय** | தவிர |
| கே அலாவா | **के अलावा** | தவிரவும் |
| கே பா[3]ரே மேன் | **के बारे में** | பற்றி, குறித்து |
| கி ஓர் | **की ओर** | பக்கமாய் |
| கி தரப்[2] | **की तरफ़** | நோக்கி, பக்கமாய் |
| கி ஜக[3]ஹ் | **की जगह** | இடத்தில், பதிலாக |
| கி தரஹ் | **की तरह** | போன்று, போல |

பெரும்பான்மை இடைச்சொற்களுக்கு முன்னால் '**के**' என்ற வேற்றுமை உருபும், கடைசி நான்கு சொற்களுக்கு முன்னால் '**की**' என்ற உருபும் வந்திருப்பதைக் காண்க. **ओर, तरफ़, जगह, तरह** என்னுமிச் சொற்கள் பெண்பாற் சொற்களாதலால் '**के**' என்பதற்குப் பதிலாக '**की**' வந்தது.

இடைச் சொற்கள் சில சந்தர்ப்பங்களில் உருபின்றி வினையுரிச் சொல்லாகவும் பயன்படும்.

உதாரணமாக :

| | | |
|---|---|---|
| அந்தர் ஜாவோ | **अंदर जाओ** | உள்ளே போ: |
| பாஸ் ஆவோ | **पास आओ** | அருகே வா. |

**சில புதிய சொற்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பேட் | **पेड** | மரம் | ஷக்கர் | **शक्कर** | சர்க்கரை |
| சிடியான் | **चिड़ियाँ** | பறவை[கள் | லௌட்னா | **लौटना** | திரும்ப |
| | | | மஹீனா | **महीना** | மாதம் |
| ஜூதா | **जूता** | செருப்பு | ஸமுத்ர | **समुद्र** | சமுத்திரம் |
| தாலாப் | **तालाब** | குளம் | | | |

**வாக்கியங்கள் :**

தும் கம்ரே கே அந்தர் க்யா கர்தே ஹோ ?
तुम कमरे के अंदर क्या करते हो ?
நீ அறையின் உள்ளே என்ன செய்கிறாய் ?

குத்தா கம்ரே கே பாஹர் பைடா ஹை.
कुत्ता कमरे के बाहर बैठा है।
நாய் அறைக்கு வெளியே உட்கார்ந்திருக்கிறது.

பேட் கே ஊபர் சிடியான் ஹைன்.
पेड के ऊपर चिडियाँ हैं।
மரத்தின் மேல் பறவைகள் இருக்கின்றன.

மேஜ் கே நீசே மேரா ஜூதா ஹை.
मेज के नीचे मेरा जूता है।
மேசையின் கீழே என்னுடைய செருப்பு இருக்கிறது.

மைன் ஹரி கே ஸாத் ஸ்கூல் ஜாதா ஹூன்.
मैं हरि के साथ स्कूल जाता हूँ।
நான் ஹரியுடன் பள்ளிக்கூடம் போகிறேன்.

ஷக்கர் கே பினா சாய் அச்சா நஹீன் லக்தா.
शक्कर के बिना चाय अच्छा नहीं लगता।
சர்க்கரை இல்லாமல் தேநீர் நன்றாக இல்லை.

ஷேகர் கே பாஸ் ஏக் கடீ ஹை.
शेखर के पास एक घडी है।
சேகரனிடத்தில் ஒரு கடிகாரம் இருக்கிறது.

ஹமாரே கர் கே பாஸ் ஏக் மந்திர் ஹை.
हमारे घर के पास एक मंदिर है।
எங்கள் வீட்டின் அருகில் ஒரு கோயில் இருக்கிறது.

மந்திர் கே ஸாம்னே ஏக் தாலாப் ஹை.
मंदिर के सामने एक तालाब है।
கோயிலுக்கு எதிரே ஒரு குளம் இருக்கிறது.

மைன் ரோஜ் பாஞ்ச் பஜே கே பஹ்லே உட்தா ஹூன்.
मैं रोज़ पाँच बजे के पहले उठता हूँ।
நான் தினந்தோறும் ஐந்து மணிக்கு முன்னல் எழுந்திருக்கிறேன்.

பிதாஜீ சஹ மஹீனே கே பாத் பம்பயீ ஸே லௌடேங்கே.
पिताजी छः महीने के बाद बंबई से लौटेंगे।
தந்தை ஆறு மாதங்களுக்குப் பிறகு பம்பாயிலிருந்து திரும்புவார்.

முர்லீ கே யஹான் ஏக் ரேடியோ ஹை.
मुरली के यहाँ एक रेडियो है।
முரளியின் வீட்டில் ஒரு ரேடியோ இருக்கிறது.

மைன் ஹிந்தீ கே அலாவா அங்ரேஜீ ஔர் தமில்
मैं हिन्दी के अलावा अंग्रेजी और तमिल
நான் ஹிந்தியைத் தவிர ஆங்கிலமும் தமிழும்

பீ பட்தா ஹூன்.
भी पढता हूँ।
கூடப் படிக்கிறேன்.

ஆப்கே ஸிவா கௌன் யஹ் காம் கரேங்கே?
आपके सिवा कौन यह काम करेंगे ?
தங்களைத் தவிர யார் இந்த வேலையைச் செய்வார்கள்?

கெனேடி கே பாரே மேன் தும் க்யா ஜான்தே ஹோ?
केनेडी के बारे में तुम क्या जानते हो ?
கென்னடியைப் பற்றி நீ என்ன அறிவாய்?

மைன் காவ் கி ஓர் ஜா ரஹா ஹூன்.
मैं गाँव की ओर जा रहा हूँ।
நான் கிராமத்தின் பக்கமாய் போய்க்கொண்டிருக்கிறேன்.

நதியான் ஸமுத்ர கி தரப் பஹ்தீ ஹைன்.
नदियाँ समुद्र की तरफ़ बहती हैं।
நதிகள் சமுத்திரத்தை நோக்கி ஓடுகின்றன.

ஆஜ்கல் ரமேஷ் கி ஜகஹ் கௌன் காம் கர்தே ஹைன்?
आजकल रमेश की जगह कौन काम करते हैं ?
இந்நாளில் ரமேஷின் இடத்தில் யார் வேலை செய்கிறார்கள்?

உமா டீக் லதா கி தரஹ் காதீ ஹை.
उमा ठीक लता की तरह गाती है।
உமா சரியாய் லதாவைப்போல் பாடுகிறாள்.

## 13. பிரதிப் பெயர்களும் வேற்றுமை உருபுகளும்

| | |
|---|---|
| मोहन अच्छा लडका है। | மோஹன் நல்ல பையன். |
| मोहन बडा होशियार है। | மோஹன் மிகவும் கெட்டிக்காரன். |
| यह किताब मोहन की है। | இந்தப் புத்தகம் மோஹனுடையது. |
| यह किताब मोहन को दो। | இந்தப் புத்தகத்தை மோஹனுக்குக் கொடு. |

மேற்கண்ட நான்கு வாக்கியங்களிலும் மோஹன் என்னும் பெயர்ச் சொல் வந்துள்ளதைக் காண்க. இவ்வாறு ஒரே பெயர்ச் சொல்லைத் திரும்பத் திரும்ப உபயோகிக்க நேரும் போது, பெயர்ச் சொல்லின் இடத்தில் அதற்குப் பதிலாகப் பிரதிப் பெயர்ச் சொற்கள் உபயோகிக்கப் படுகின்றன. பிரதிப்பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபு சேரும் பொழுது அவற்றின் உருவம் மாறும்.

**मोहन अच्छा लडका है।** மோஹன் நல்ல பையன்.
**वह बडा होशियार है।** அவன் மிகவும் கெட்டிக்காரன்.
**यह किताब उसकी है।** இந்தப் புத்தகம் அவனுடையது.
**यह किताब उसको दो।** இந்தப் புத்தகத்தை அவனுக்குக் [கொடு.

**'वह'** (அவன்) என்னும் சொல் பிரதிப் பெயர்ச் சொல்லாகும். அதனுடன் **की, को** ஆகிய வேற்றுமை உருபுகள் சேரும் பொழுது முறையே **उसकी, उसको** என்று மாறியுள்ளதைக் காண்க. **मैं, तुम, तू, हम, वह, यह, वे, ये** என்னுமிவை பிரதிப் பெயர்ச் சொற்களாகும். வேற்றுமை உருபுகள் சேரும்போது இவை பின்வருமாறு மாறும்.

**मैं + को = मुझको, मुझे,** எனக்கு, என்னை
**मैं + से = मुझसे** என்னால், என்னுடன், என்னிடமிருந்து, என்னைக் காட்டிலும்.
**मैं + का = मेरा** என்னுடைய
**मैं + के = मेरे** ,,
**मैं + की = मेरी** ,,

मैं + में = मुझमें என்னிடத்தில்

तुम + को = तुम्हें, तुमको உனக்கு, உன்னை.

तुम + का = तुम्हारा உன்னுடைய.

तुम + के = तुम्हारे ,,

तुम + की = तुम्हारी ,,

हम + को = हमें, हमको எங்களுக்கு, எங்களை

हम + का = हमारा எங்களுடைய

हम + के = हमरे ,,

हम + की = हमारी ,,

**तुम, हम** ஆகிய பிரதிப் பெயர்களுடன் **से, में** என்னும் வேற்றுமை உருபுகள் சேரும்பொழுது அவை மாறமாட்டா.

**यह, वह** என்னும் பிரதிப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுடன் சேர்ந்து **इस, उस** என மாறும். அங்ஙனமே **ये, वे** என்னும் பன்மைப் பிரதிப் பெயர்கள் வேற்றுமை உருபு வருங்கால் **इन, उन** என மாறுபாடு அடையும்.

**आप** (தாங்கள்) என்னும் பிரதிப்பெயர்ச் சொல் எந்த வேற்றுமை உருபுடன் கூடினாலும் ஒரு மாற்றமும் அடைவதில்லை.

### வாக்கியங்கள்

**तुम्हारा नाम क्या है ?**
உன்னுடைய பெயர் என்ன ?

**मेरा नाम राघव है।**
என்னுடைய பெயர் ராகவன்.

**मुझे हिन्दी मालूम है।**
எனக்கு ஹிந்தி தெரியும்.

**मेरे दो भाई स्कूल जाते हैं।**
என்னுடைய இரண்டு சகோதரர்களும் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

**परशुरामजी हमारे अध्यापक हैं।**
பரசுராம்ஜி எங்களுடைய உபாத்தியாயர்.

**भारत हमारा देश है।**
இந்தியா நம்முடைய தேசம்.

**उसका नाम रमेश है।**
அவனுடைய பெயர் ரமேஷ்.

**इस लडके का नाम बताओ।**
இந்தப் பையனுடைய பெயரைச் சொல்.

**कुछ दिन से मेरी तबीयत खराब है।**
கொஞ்ச நாட்களாக என்னுடைய உடல்நிலை கெட்டிருக்கிறது.

**आपकी तबीयत अच्छी है?**
தங்கள் உடல் நிலை நன்றாயிருக்கிறதா?

**इनको क्या चाहिए?**
இவர்களுக்கு என்ன வேண்டும்?

**इनको थोडा पानी चाहिए।**
இவர்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.

**उनको बुलाओ।**
அவரைக் கூப்பிடு.

**तुम्हारी माँ कहाँ है?**
உன்னுடைய தாய் எங்கே இருக்கிறாள்?

**मेरी माँ रसोईघर में है।**
என்னுடைய தாய் சமையலறையில் இருக்கிறாள்.

**ये किताबें हमारी नहीं हैं।**
இந்தப் புத்தகங்கள் எங்களுடையன அல்ல.

**यह घर हमारा है।**

*இந்த வீடு எங்களுடையது.*

**इसमें चार कमरे और एक रसोईघर हैं।**

*இதில் நான்கு அறைகளும் ஒரு சமையலறையும் [இருக்கின்றன.*

**आप किससे दूध खरीदते हैं?**

*தாங்கள் யாரிடத்தில் பால் வாங்குகிறீர்கள்?*

**यह किसकी किताब है?**

*இது யாருடைய புத்தகம்?*

**वह किसी से कुछ नहीं बोलता।**

*அவன் எவரிடத்திலும் ஏதும் பேசுவதில்லை.*

கடைசிக்கு முன்னிரண்டு வாக்கியங்களில் **कौन** என்ற பிரதிப் பெயர்ச் சொல்லுடன் முறையே **से, की** என்ற வேற்றுமை உருபுகள் சேர்ந்து **किससे, किसकी** என்று மாறியுள்ளதைக் காண்க. கடைசி வாக்கியத்தில் **कोई** என்ற பிரதிப் பெயர்ச் சொல்லுடன் '**से**' என்னும் வேற்றுமை உருபு இணைந்து **किसीसे** என்றாயிற்று.

**वह, यह, कौन, जो** என்னுமிப் பிரதிப் பெயர்ச் சொற்களுடன் இரண்டாம் வேற்றுமை உருபு **को** சேரும் போது முறையே **उसको, इसको, किसको, जिसको** என மாறும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இவற்றிற்கு இரண்டிரண்டு உருவங்கள் உண்டு. அவை : **उसको—उसे ; इसको—इसे ; किसको—किसे ; जिसको—जिसे।**

அவ்வாறே பன்மையிலும் **उनको—उन्हें ; इनको—इन्हें ; किनको - किन्हें ; जिनको—जिन्हें** என இரு உருவங்களைப் பெற்றுள்ளன.

ஹிந்தியில் தன்னைத் தான் குறிக்க **आप** என்ற சொல் உபயோகிக்கப்படும்.

(உ - ம்) **रमेश आप आता है।**

ரமேஷ் தானே (தானாகவே) வருகிறான்.

**ललिता आप काम करती है।**

லலிதா தானே வேலை செய்கிறாள்.

இதனுடன் ஆறும் வேற்றுமை உருபான **का, के, की** சேரும்போது முறையே **अपना, अपने, अपनी** என மாறும்.

## 14. பால்—எண்

ஏற்கெனவே கூறியுள்ளது போல் ஹிந்தியில் பெயர்ச் சொற்கள் யாவும் ஆண்பால், பெண்பால் என்ற இரு வகுப்பில் அடங்கும். தமிழில் போன்று உயர்திணை அஃறிணை பாகுபாடு இல்லை.

சாதாரணமாக ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் ஆண்பால் ஆகவும் பெண்ணைக் குறிப்பன பெண்பாலாகவும் அமையும். ஜடப் பொருள்களில் சில ஆண்பாலாயும் சில பெண்பாலாயும் அமைந்திருக்கின்றன. இவற்றை அறியச் சில விதிகள் உண்டு.

**अ** அல்லது **आ** வில் முடியும் சொற்கள் ஆண்பால்.

(உ-ம்) **घर** வீடு, **रास्ता** தெரு.

**मदरसा** பள்ளிக்கூடம், **रुपया** ரூபாய்.

**इ** அல்லது **ई** யில் முடிவன பெண்பாற் சொற்களாம்.

(உ-ம்) **नदी** நதி, **गाडी** வண்டி.

**रोटी** ரொட்டி, **चिट्ठी** கடிதம்.

எந்த ஒரு விதிக்கும் விலக்கு உண்டு அல்லவா?

ஹிந்தியில் மேற்கூறிய விதிக்குப் புறம்பாக अ, आ வில் முடியும் பெண்பாற் சொற்களும் इ, ई யில் முடியும் ஆண்பாற் சொற்களும் சில உண்டு. உதாரணம்:

1. सड़क - தெரு. 2. माला - மாலை. (பெண்பால்)
1. पानी - தண்ணீர். 2. मोती - முத்து (ஆண்பால்)

ஒரு பெயர்ச் சொல்லின் பாலை அதன் உரிச் சொல், வினைச் சொல் அல்லது அதற்கு முன்வரும் ஆறும் வேற்றுமை உருபு का, के, की யிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

**எண்**:—ஒருமை, பன்மை என எண் இரண்டே.

ஒருமையைப் பன்மையாக்கும் முறை வருமாறு:—

आ வில் முடியும் ஆண்பால் பெயர்ச் சொற்களின் आ வை ए யாக மாற்றினுல் பன்மைச் சொற்களாகும்.

(உ-ம்) लड़का பையன், लड़के - பையன்கள்
घोड़ा குதிரை, घोड़े - குதிரைகள்.

ई யில் முடியும் பெண்பாற் சொற்கள் பன்மையில் इयाँ என்று முடியும்.

(உ-ம்) लड़की பெண், लड़कियाँ பெண்கள்.
घड़ी கடிகாரம், घड़ियाँ கடிகாரங்கள்.

சில ஆண்பால் சொற்கள் ஒருமை பன்மை இரண்டிலும் ஒரே உருவமாய் இருக்கும்; மாறுவதில்லை. உதாரணம்:

घर - வீடு, வீடுகள்
आदमी - மனிதன், மனிதர்கள்

இவை வாக்கியங்களில் வரும்பொழுது பொருளைக் கொண்டு இவற்றின் எண்ணை அறியலாம்.

अ, आ வில் முடியும் பெண்பால் ஒருமைச் சொற்கள் பன்மையில் एँ என்று முடியும்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| पुस्तक | पुस्तकें |
| सडक | सडकें |
| माता | माताएँ |
| माला | मालाएँ |

வேற்றுமை உருபுகளுடன் வரும் பெயர்ச் சொற்கள் எந்தப் பாலாக இருந்தபோதிலும் அவற்றைப் பன்மையாக்க, சொல்லின் கடைசி எழுத்துடன் ओं சேர்க்க வேண்டும்.

इ, ई யில் முடியும் பெயர்ச் சொற்களின் இறுதியில் ओं விற்குப் பதிலாக यों உபயோகிக்கவேண்டும்.

(உ-ம்) सडक—सडकों में, घोडा - घोडोंके

किताब—किताबों से

नदी—नदियों में

**வாக்கியங்கள்**

आजकल घी बहुत महँगा है।

இந்நாட்களில் நெய் மிகக் கிராக்கியாக இருக்கிறது.

यह राम का घर है।

இது ராமனின் வீடு.

यह छोटी लड़की मेरी बहन है।

இந்தச் சிறு பெண் என் சகோதரி.

चिड़ियाँ आकाश में उड़ती हैं।

பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன.

गधे के कान लम्बे होते हैं।

கழுதையின் காதுகள் நீளமாய் இருக்கின்றன.

यह सड़क चौड़ी होती है।

இந்தத் தெரு அகலமாய் இருக்கிறது.

लक्ष्मी की आँखें सुंदर हैं।

லக்ஷ்மியின் கண்கள் அழகாய் இருக்கின்றன.

लेकिन उसके दाँत साफ़ नहीं हैं।

ஆனால் அவளுடைய பற்கள் சுத்தமாயில்லை.

मेरे पास दो घड़ियाँ हैं।

என்னிடம் இரண்டு கடிகாரங்கள் இருக்கின்றன.

डाकिया चिट्ठियाँ लाता है।

தபால்காரன் கடிதங்கள் கொண்டு வருகிறான்.

उन लड़कों को बुलाओ।

அந்தப் பையன்களைக் கூப்பிடு.

रमेश की बिल्ली काली है।

ரமேஷின் பூனை கறுப்பாய் இருக்கிறது.

मेरे घर में तीन कुर्सियाँ हैं।

என் வீட்டில் மூன்று நாற்காலிகள் உள்ளன.

बच्चा कमरे में सोता है।

குழந்தை அறையில் தூங்குகிறது.

तुम्हारे पास कितनी कलमें हैं?

உன்னிடத்தில் எத்தனை பேனாக்கள் இருக்கின்றன?

मुझे एक कलम दो।

எனக்கு ஒரு பேனா கொடு.

बिल्ली दूध पीती है।

பூனை பால் குடிக்கிறது.

बिल्लियाँ दूध पीती हैं।

பூனைகள் பால் குடிக்கின்றன.

आम के फल मीठे हैं।

மாம்பழங்கள் இனிப்பாக உள்ளன.

यह गाय कितना दूध देती है?

இந்தப் பசு எவ்வளவு பால் தருகிறது?

## 15. எதிர்காலம்

நிகழ்கால வாக்கியங்கள் அமைக்கும் முறை உங்களுக்குத் தெரியும். இனி, எதிர்கால வாக்கியங்கள் அமைக்க வினைப்பகுதியுடன் என்னென்ன விகுதிகளை எவ்விதத்தில் சேர்க்க வேண்டும் என்பதை இப்பாடத்தில் தெரிந்து கொள்ளலாம்.

जा, आ, खा போன்ற வினைப்பகுதிகளுடன் **एगा** என்னும் விகுதியைச் சேர்த்தால் ஆண்பால் ஒருமை எதிர்காலம் கிடைக்கும்.

**एँगे** என்னும் விகுதியைச் சேர்த்தால் கிடைப்பது ஆண்பால் பன்மை எதிர்காலமாகும்.

**मैं, तुम** ஆகிய தன்மை, முன்னிலைகளுக்கு வினைப் பகுதியுடன் **ऊँगा, ओगे** என்னும் விகுதிகளை முறையே சேர்க்க வேண்டும்.

| ஆண்பால் ஒருமை | ஆண்பால் பன்மை |
| --- | --- |
| **मैं जा + ऊँगा** | **हम जा + एँगे** |
| **तुम + जा ओगे** | **आप जा + एँगे** |
| **वह जा + एगा** | **वे जा + एँगे** |

எழுவாய் பெண்பாலானால் மேற்கண்ட ஆண்பால் எதிர்கால விகுதிகளின் ஈற்றிலுள்ள **गा, गे** என்பவற்றை **गी** என மாற்ற வேண்டும்.

| பெண்பால் ஒருமை | பெண்பால் பன்மை |
| --- | --- |
| मैं जाऊँगी | हम जाएँगी |
| तुम जाओगी | आप जाएँगी |
| वह जाएगी | वे जाएँगी |

**ले, दे, हो** இம்மூன்று வினைச் சொற்களுடன் எதிர்கால விகுதி சேரும் போது சிறு மாற்றத்துடன் கீழ்க்கண்டவாறு அமையும்.

मैं लूँगा, तुम लोगे, वह लेगा, वे लेंगे
मैं दूँगा, तुम दोगे, वह देगा, वे देंगे
मैं हूँगा, तुम होगे, वह होगा, वे होंगे

### எதிர்கால வாக்கியங்கள்

रघु, तुम छुट्टी में कहाँ जाओगे ?

ரகு, நீ விடுமுறையில் எங்கே போவாய் ?

मैं देहली जाऊँगा।

நான் டில்லிக்குப் போவேன்.

तुम्हारे साथ कौन कौन आएँगे ?

உன்னோடு யார்யார் வருவார்கள் ?

मेरे साथ मेरे दोनों भाई आएँगे।

என்னோடு என் இரண்டு சகோதரர்களும் வருவார்கள்.

तुम लोग वहाँ कितने दिन ठहरेंगे ?

நீங்கள் அங்கே எத்தனை தினங்கள் தங்குவீர்கள் ?

हम वहाँ एक महीना ठहरेंगे।

நாங்கள் அங்கே ஒரு மாதம் தங்குவோம்.

क्या तुम्हारी बहन भी देहली आएगी ?

உன்னுடைய சகோதரியும் டில்லிக்கு வருவாளா ?

नहीं, वह बीमार है। इसलिए

இல்லை; அவள் நோயுற்றிருக்கிறாள். ஆகையால்

यहीं रहेगी।

இங்கேயே இருப்பாள்.

देहली जाकर तुम मुझे चिट्ठी लिखोगे ?

டில்லிக்குப் போய் நீ எனக்குக் கடிதம் எழுதுவாயா ?

हाँ! मैं जरूर तुम्हें चिट्ठी लिखूँगा।

ஆம், நான் அவசியம் உனக்குக் கடிதம் எழுதுவேன்.

आज शाम को तुम कहाँ जाओगे ?
இன்று மாலை நீ எங்கே போவாய் ?

मैं सिनेमा देखने जाऊँगा। क्या तुम भी आओगे ?
நான் சினிமா பார்க்கப் போவேன் ; நீயும் வருவாயா ?

जरूर आऊँगा। हमारे साथ और कौन कौन आएँगे ?
அவசியம் வருவேன் ; நம்முடன் இன்னும் யார்யார் வருவார்கள் ?

और कोई नहीं आएगा, सिर्फ तुम और हम जाएँगे।
வேறு எவரும் வரமாட்டார்கள், நீயும் நானும் மாத்திரமே போவோம்.

महेश, तुम यह किताब खरीदोगे ?
மகேஷ், நீ இந்தப் புத்தகத்தை வாங்குவாயா ?

हाँ, यह किताब बडी अच्छी है। मैं इसे खरीदूँगा।
ஆம், இந்தப் புத்தகம் மிக நன்றாகயிருக்கிறது. நான் இதை வாங்குவேன்.

कल की सभा में कौन बोलेंगे।
நாளைய கூட்டத்தில் யார் பேசுவார்கள் ?

कल की सभा में राजाजी बोलेंगे।
நாளைய கூட்டத்தில் ராஜாஜி பேசுவார்.

मैं भी राजाजी के भाषण सुनने आऊँगा।
நானும் ராஜாஜியின் பிரசங்கத்தை கேட்க வருவேன்.

अच्छा, हम सब जाएँगे।
நல்லது, நாம் எல்லோரும் போவோம்.

## 16. இறந்த காலம்

வினைச் சொற்களுக்கு இறந்தகால உருவம் தர வினைப் பகுதியுடன் **आ** அல்லது **या** வைச் சேர்க்க வேண்டும், வினைப் பகுதி மெய்யெழுத்தில் முடிந்தால் **आ** வும் உயிர் அல்லது உயிர் மெய் யெழுத்தில் முடிந்தால் **या** வும் சேர்க்க வேண்டும்.
(உ-ம்)

कह — कहा, सुन — सुना, लिख — लिखा,
இவற்றில் '**आ**' சேர்க்கப் பெற்றுள்ளது.

आ — आया, धो — धोया, नहा — नहाया, ला — लाया, இவற்றில் '**या**' சேர்க்கப் பெற்றுள்ளதைக் கவனியுங்கள்.

**ई, ऊ** வில் முடியும் வினைப் பகுதிகளுடன் **आ, या** சேரும் முன் நெடில் குறுகும்.

(உ-ம்) पी — पिया, सी — सिया, छू — छुआ

**दे, ले, जा, कर, हो** இந்த வினைச் சொற்களின் இறந்த கால உருவங்கள் மாறுபாடடைந்து காணும்.

दे—दिया, ले—लिया, जा—गया, कर—किया, हो—हुआ

இறந்தகால வினைச் சொற்கள் பன்மையைக் காட்டவும் பெண்பாலைக் காட்டவும் **आ, ए, ई** விதிப்படி மாறும்.

[உ-ம்] ஆ.பா. ஒருமை ஆ.பா. பன்மை பெண்பால் ஒருமை

| ஆ.பா. ஒருமை | ஆ.பா. பன்மை | பெண்பால் ஒருமை |
|---|---|---|
| लिखा | लिखे | लिखी |
| खाया | खाये | खायी |

**पिया, दिया, लिया, किया** இவை பெண்பாலில் முறையே **पी, दी, ली, की** என்றாகும்.

பெண்பால் பன்மையைக் குறிக்க, பெண்பால் ஒருமையில் அனுஸ்வாரம் சேர்க்க வேண்டும்.

[உ-ம்] **लिखीं, खायीं, सोईं**

செயப்படு பொருள் குன்றிய வினைச் சொற்கள் மற்ற காலங்களில் போலவே இறந்த காலத்திலும் எழுவாயைத் தழுவி பால், எண், இடம் இவற்றின் விகுதிகளை ஏற்று வரும். இவற்றிற்கு உதாரணமாகச் சில வாக்கியங்கள் வருமாறு.

### இறந்தகால வாக்கியங்கள்

(செயப்படு பொருள் குன்றியவினை.)

रमेश, तुम कलकते से कब आये ?
ரமேஷ், நீ கல்கத்தாவிலிருந்து எப்போது வந்தாய் ?

मैं कल आया ।
நான் நேற்று வந்தேன்.

तुम्हारे साथ कौन कौन आये ?
உன்னுடன் யார் யார் வந்தார்கள் ?

मेरे साथ मेरे दो मित्र आये ।

என்னுடன் என் இரு நண்பர்கள் வந்தார்கள்.

उन दोनों की बहनें भी आयीं ।

அவ்விருவரின் சகோதரிகளும் வந்தார்கள்.

तुम सब किस गाडी से आये ?

நீங்கள் எல்லோரும் எந்த வண்டியில் வந்தீர்கள்?

हम सब कलकत्ता मेल से आये.

நாங்கள் எல்லோரும் கல்கத்தா மெயிலில் வந்தோம்.

कलकत्ते में तुम कहाँ ठहरे ?

கல்கத்தாவில் நீ எங்கே தங்கினாய் ?

मैं अपने चाचाजी के घर में ठहरा ।

நான் என் சிற்றப்பாவின் வீட்டில் தங்கினேன்.

तुम कल शाम को यहाँ क्यों नही आये ?

நீ நேற்று மாலை இங்கு ஏன் வரவில்லை ?

कल मैं अपनी बहन के घर गया ।

நேற்று நான் என் சகோதரி வீட்டிற்குச் சென்றேன்.

वहाँ से कब लौट आये ?

அங்கிருந்து எப்போது திரும்பி வந்தாய் ?

आज सबेरे ही लौट आया ।

இன்று காலை தான் திரும்பி வந்தேன்.

रात को क्यों नहीं लौटे ?

இரவில் ஏன் திரும்பவில்லை ?

बहन को बुखार हो आया था। रात भर वह नहीं सोयी।

சகோதரிக்கு ஜுரம் வந்துவிட்டிருந்தது. இரவு முழுதும் [அவள் தூங்கவில்லை.

तुम सबेरे कितने बजे जागे ?

நீ காலையில் எத்தனை மணிக்குக் கண்விழித்தாய்?

मैं आज सबेरे पाँच बजे जागा।

நான் இன்று காலை ஐந்து மணிக்குக் கண்விழித்தேன்.

இறந்த காலத்தில் செயப்படு பொருள் குன்றிய வினை பயனிலையாக வரும்போது எழுவாயின் எண்ணையும் பாலையும் தழுவி அமைவதை மேற்கண்ட வாக்கியங்களில் கண்டீர்கள்.

இனி, செயப்படுபொருள் குன்றா வினைகள் பயனிலை யாக வரும்போது எழுவாயுடன் ने விகுதி சேரும். வினைச் சொல் எழுவாயின் பால் எண்ணைத் தழுவி வராமல் செயப்படு பொருளின் பாலையும் எண்ணையும் தழுவி வரும்.

ஒரு வினை செயப்படுபொருள் குன்றிய வினையா, குன்றாத வினையா என்பதைக் கண்டறியச் சுலப முறை ஒன்றுண்டு. அதாவது அந்த வினைச் சொல்லைக் கொண்டே எதை அல்லது யாரை என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

கேள்விக்கு விடை கிடைத்தால் செயப்படு பொருள் குன்றா வினை என்றும், கிடைக்காவிடில் செயப்படு பொருள் குன்றிய வினை என்றும் கொள்க.

'செல்', 'எழுது' என்ற இரு வினைச் சொற்களை உதாரணமாக கொள்வோம். 'செல்' என்பதுடன் 'எதை'

என்ற கேள்விச் சொல்லை இணைத்து 'எதைச் சென்றாய் ?' என்று கேட்பது பொருந்தாது. பொருந்தாத இந்தக் கேள்விக்கு விடையும் கிடையாது.

'எதை எழுதினாய் ?' என்று கேட்பது பொருந்தும். அதற்கு ஏதோ ஒரு விடையைக் கூற முடியும். எனவே இவ்விரண்டு வினைகளில் முன்னது செயப்படு பொருள் குன்றிய வினை ; பின்னது செயப்படு பொருள் குன்றாத வினை.

**ला, भूल, बोल** இவ்வினைகள் செயப்படு பொருள் குன்றா வினையாயினும் இறந்தகாலத்தில் இவை வரும் வாக்கியத்தில் எழுவாயுடன் **ने** சேர்க்கக் கூடாது.

**यह, वह, ये, वे** இப்பிரதிப் பெயர்ச் சொற்களுடன் '**ने**' விகுதி சேரும் போது முறையே **इसने, उसने, इन्होंने, उन्होंने** எனவும், **कौन** என்ற சொல்லுடன் '**ने**' சேரும் போது ஒருமையில் **किसने** என்றும் பன்மையில் **किन्हों ने** என்றும் மாறும்.

தவிர வேறோர் முக்கிய விதியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். செயப்படு பொருள் தொக்கு நின்றாலும் அல்லது அதனுடன் இரண்டாம் வேற்றுமை விகுதி சேர்ந்து வந்தாலும் பயனிலை ஆண்பால் ஒருமை யாகவே இருக்கும்.

மேற்கண்ட விதிகளுக்கு உதாரணமாகச் சில வாக்கியங்கள் வருமாறு.

तुमने सबेरे क्या पिया ?

நீ காலையில் என்ன குடித்தாய் ?

मैंने सवेरे चाय पी।

நான் காலையில் தேநீர் குடித்தேன்.

बच्चों ने खाना खाया।

குழந்தைகள் உணவு உண்டனர்.

सुशीला ने भात खाया।

சுசீலா சாதம் சாப்பிட்டாள்.

अध्यापक ने पाठ पढाया।

உபாத்தியாயர் பாடம் கற்பித்தார்.

हमने पाठ पढा।

நாங்கள் பாடம் படித்தோம்.

माँने रोटियाँ बनायीं।

தாயார் ரொட்டிகள் செய்தாள்.

मैंने आज रोटी नहीं खायी।

நான் இன்று ரொட்டி சாப்பிடவில்லை.

रमेश ने दो रोटियाँ खायीं।

ரமேஷ் இரண்டு ரொட்டிகள் சாப்பிட்டான்.

यह घडी गोपाल ने खरीदी।

இந்தக் கடிகாரம் கோபால் வாங்கினான்.

मैंने एक कलम खरीदी।

நான் ஒரு பேனா வாங்கினேன்.

उसने मुझे दस रुपये दिये।

அவன் எனக்குப் பத்துரூபாய் தந்தான்.

श्रीराम ने अपना मकान बेचा।

ஸ்ரீராம் தன் வீட்டை விற்றான்.

नीलकंठ ने उसे खरीदा।

நீலகண்டன் அதை வாங்கினான்.

उसने लिखा। அவன் எழுதினான்.

मैंने पढा। நான் படித்தேன்.

हमने देखा। நாங்கள் பார்த்தோம்.

शीला ने हमको बुलाया।

ஷீலா எங்களைக் கூப்பிட்டாள்.

शीला ने कुत्ते को बाँधा।

ஷீலா நாயைக் கட்டினாள்.

कुत्ते ने चोर को भगाया।

நாய் திருடனை விரட்டியது.

## 17. இறந்த காலம் (தொடர்ச்சி)

தொடர் இறந்தகாலம்

मैं खाना खा रहा था।

நான் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

गोविंद पाठ पढ रहा था।

கோவிந்தன் பாடம் படித்துக் கொண்டிருந்தான்.

लडके गेंद खेल रहे थे।

சிறுவர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

वे बातचीत कर रहे थे।

அவர்கள் சம்பாஷணை செய்து கொண்டிருந்தார்கள்.

लडकियाँ गीत गा रही थीं।

பெண்கள் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

स्त्रियाँ कपड़े सी रही थीं।
ஸ்த்ரீகள் துணி தைத்துக் கொண்டிருந்தார்கள்.

உதாரண வாக்கியங்கள் தொடர் இறந்த காலத்தைக் குறிப்பன. தொடர் நிகழ்காலம் போலவே இதிலும் வினைப்பகுதிக்குப்பின் **रहा, रहे, रही** ஆகிய விகுதிகள் எழுவாயின் எண், பால், இடம் இவற்றுக்குத் தக்கவாறு சேர்க்கப் பெறுகின்றன.

**நிகழ்காலமுற்றுவினை, இறந்தகாலமுற்றுவினை, சந்தேகத்தைக்காட்டும் இறந்தகாலம் :—**

**मैं आया**—நான் வந்தேன்.
**मैं आया हूँ**—நான் வந்திருக்கிறேன்.

இவ்விரு வாக்கியங்களையும் ஒப்பு நோக்கினால் வாக்கியத்தின் பொருளிலும் இலக்கணத்திலும் உள்ள வித்தியாசம் தெரியவரும்.

'**है**' இருக்கிறது என்ற பொருளில் வரும் முக்கிய வினைச் சொல் என்று முன்னமே கூறினோம். அதன் நிகழ்கால, இறந்தகால, எதிர்கால (**है, था, होगा**) மாறுபாடுகளை இறந்தகால வினைச் சொற்களுடன் சேர்த்தால், முறையே நிகழ்கால முற்றுவினை, இறந்தகால முற்றுவினை, சந்தேகத்தைக் காட்டும் இறந்தகாலம் கிடைக்கும். முந்தைய பாடத்தில் கூறப்பட்ட **ने** விதி இம்மூன்றிற்கும் பொருந்தும்.

உதாரணமாக **पढ़ना** என்ற வினைச் சொல்லை எடுத்துக் கொள்வோம். அதன் இறந்தகால உருவம் **पढ़ा** அதனுடன் **है, था, होगा** இவற்றைச்சேர்த்துப் பார்த்தால் பின்கண்டபடி அமையும்.

**पढा है** படித்திருக்கிறான் (நிகழ்கால முற்றுவினை).

**पढा था** படித்திருந்தான் (இறந்தகால முற்றுவினை).

**पढा होगा** படித்திருப்பான் (சந்தேகம் காட்டும் இறந்த காலம்).

**நிகழ்கால முற்றுவினை வாக்கியங்கள் :**

मेरे पिताजी देहली से आये हैं।

என் தந்தை டில்லியிலிருந்து வந்திருக்கிறார்.

माताजी भी उनके साथ आयी हैं।

தாயாரும் கூட அவருடன் வந்திருக்கிறார்.

अभी हम सब खाये हैं।

இப்போதுதான் நாங்கள் எல்லோரும் சாப்பிட்டிருக்
[கிறோம்.

राधा कहीं नहीं गयी है।

ராதா எங்கும் போயிருக்க வில்லை.

उसने अपना सबक याद किया है।

அவன் தன் பாடத்தை நினைத்திருக்கிறான்.

सुरेश ने एक कविता लिखी है।

ஸுரேஷ் ஒரு கவிதை எழுதியிருக்கிறான்.

मैंने नौकर को बाजार भेजा है।

நான் வேலைக்காரனைக் கடைத் தெருவுக்கு அனுப்பி
[யிருக்கிறேன்.

डाकिया आया है।

தபாற்காரன் வந்திருக்கிறான்.

இறந்தகால முற்று வினை வாக்கியங்கள்:

मैं खेलने गया था।

நான் விளையாடச் சென்றிருந்தேன்.

पिताजी कुरसी पर बैठे थे।

தந்தையார் நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

हम दोनों कल सिनेमा गये थे।

நாங்களிருவரும் நேற்று சினிமாவுக்குப் போயிருந் [தோம்.

सीता मंदिर में गयी थी।

ஸீதை கோயிலுக்குப் போயிருந்தாள்.

दोस्त के घर से अभी किताबें आयी थीं।

நண்பரின் வீட்டிலிருந்து இப்போதுதான் புத்தகங் [கள் வந்திருந்தன.

मैंने देखा था।

நான் பார்த்திருந்தேன்.

मैंने चार घोडे देखे थे।

நான் நான்கு குதிரைகள் பார்த்திருந்தேன்.

हमने घोडों को देखा था।

நாங்கள் குதிரைகளைப் பார்த்திருந்தோம்.

मैंने किताब पढी थी।

நான் புத்தகம் படித்திருந்தேன்.

சந்தேகம் காட்டும் இறந்தகால வாக்கியங்கள் :

मैं गया हूँगा।

நான் போயிருப்பேன்.

मोहन आया होगा।
மோஹன் வந்திருப்பான்.

रमेश पढा होगा।
ரமேஷ் படித்திருப்பான்.

ललिता खायी होगी।
லலிதா சாப்பிட்டிருப்பாள்.

बच्चे अबतक सोये होंगे।
குழந்தைகள் இதற்குள் தூங்கியிருப்பார்கள்.

पिताजी अभी आये होंगे।
தந்தையார் இப்போதுதான் வந்திருப்பார்.

सुरेश आज बंबई पहुँचा होगा।
ஸுரேஷ் இன்று பம்பாயை அடைந்திருப்பான்.

माला ने तुम्हें घर बुलाया होगा।
மாலா உன்னை வீட்டிற்கு அழைத்திருப்பாள்.

लता ने दो रोटियाँ खायी होंगी।
லதா இரண்டு ரொட்டிகள் சாப்பிட்டிருப்பாள்.

उन्होंने कितने पाठ पढे होंगे?
அவர்கள் எத்தனை பாடங்கள் படித்திருப்பார்கள்?

### நிபந்தனையுடன் கூடிய இறந்தகாலம்

வினைப் பகுதியுடன் **ता, ते, ती** சேர்த்தால் நிபந்தனையுடன் கூடிய இறந்தகால உருவம் கிடைக்கும். வாக்கியத்தில் வினைச் சொல்லுடன் **तो** என்ற குறிச் சொல்லும் இடம் பெறும்.

**अगर** என்னும் சொல் நிபந்தனை வாக்கியத்தின் துவக்கத்தில் வரும். சாதாரணமாக அது தொக்கு நிற்கும்.

[உ-ம்]

1. तुम अच्छी तरह पढते तो परीक्षा में जरूर पास हो ।
   நீ நன்ருகப் படித்திருந்தால் பரீட்சையில் நிச்சயம் தேறியிருப்பாய்.
2. मेरे पास रुपये होते तो मैं यह घडी खरीदता ।
   என்னிடம் ரூபாய்கள் இருந்தால் நான் இந்தக் கடிகாரத்தை வாங்குவேன்.
3. पानी बरसता तो मेंढक जरूर बोलता ।
   மழை பெய்தால் தவளை கட்டாயம் கத்தும்.
4. सरला रेडियो पर गाती तो मैं अवश्य सुनता ।
   ஸரளா ரேடியோவில் பாடிஞல் நான் அவசியம் கேட்பேன்.

### முற்றுப் பெருத இறந்தகாலம்

வாக்கியத்தில் வினைச் சொல்லுக்குப்பின் **है** என்ற சொல்லின் இறந்தகால மாறுபாடுகளான **था, थे, थी, थीं,** இவற்றைச் சேர்ப்பதால் முற்றுப் பெருத இறந்த காலம் கிடைக்கும்.

(உ-ம்)

मैं कल बंबई में था ।
நான் நேற்று பம்பாயில் இருந்தேன்.

पंडितजी कल स्कूल में नहीं थे ।
பண்டிட்ஜி நேற்று ஸ்கூலில் இல்லை.

6

ललिता कमरे सोती थी।

லலிதா அறையில் தூங்கியிருந்தாள்.

वे अंग्रेजी में बोलती थीं।

அவர்கள் ஆங்கிலத்தில் பேசிவந்தார்கள்.

நிபந்தனையுடன் கூடிய இறந்த காலம், முற்றுப் பெறாத இறந்த காலம் இவ்விரண்டிலும் வாக்கியத்தில் ने வராது. வினைச் சொல் செயப்படுபொருளைத் தழுவாது.

சந்தேகத்தைக் காட்டும் நிகழ்காலம்

நிபந்தனையுடன் கூடிய இறந்தகால வாக்கியங்களி லுள்ள வினைச் சொல்லின் உருவத்துடன் **होगा, होगे, होंगे** முதலியவைகளை முறையே சேர்த்தால் சந்தேகத் தைக் காட்டும் நிகழ்காலம் கிடைக்கும்.

உதாரணமாக **लिखता** என்ற வினைச் சொல்லின் உருவத்தை எடுத்துக் கொள்வோம்.

मैं लिखता हूँगा நான் எழுதிக் கொண்டிருக்கலாம்.

तुम लिखते होगे। நீ ,, ,,

यह, वह लिखता होगा இவன் / அவன் ,, ,,

ये, वे / आप, हम } लिखते होंगे।

இவர்கள், அவர்கள், தாங்கள், நாங்கள் ,, ,,

**हूँगा होगा, होगे, होंगे** என்பவை பெண்பாலில் **हूँगी, होगी, होंगी** என மாறும்.

**लिखता** என்றிருக்கும் வினைச் சொல் உருவம் **लिखती** என்றாகும்.

(உ-ம்) मैं लिखती हूँगी।

## 18. हमारा देश

### நம் நாடு

पूरब — கிழக்கு
पश्चिम — மேற்கு
उत्तर — வடக்கு
दक्षिण — தெற்கு
कृषि — பயிர்த்தொழில்
व्यवसाय — தொழில்
पवित्र — புனிதமான
श्रेष्ठ — சிறந்த
उपजाऊ — வளம், செழுமை
महान — பெருமை வாய்ந்த
राज्य करना — அரசாள
भावना — உணர்ச்சி
रिश्ता-नाता — உறவுமுறை

भारत हमारा देश है।
பாரதம் நம்முடைய நாடு.

हमारा देश बहुत बडा है।
நம் நாடு மிகப் பெரியது.

हमारे देश के उत्तर में हिमालय पहाड है।
நம் நாட்டின் வடக்கில் இமயமலை இருக்கிறது.

दक्षिण में हिन्द महासागर है।
தெற்கில் இந்து மகா சமுத்திரம் உள்ளது.

पूरब में बंगाल की खाडी और पश्चिम में अरब सागर है।

கிழக்கில் வங்காளக் குடாக்கடலும் மேற்கில் அரபிக் கடலும் இருக்கின்றன.

यहाँ कृषि ही प्रधान व्यवसाय है।

இங்கு பயிர்த் தொழில்தான் முக்கியத் தொழிலாகும்.

गंगा, यमुना, कृष्णा, कावेरी आदि यहाँ की पवित्र नदियाँ हैं।

கங்கை, யமுனா, க்ருஷ்ணா, காவேரி முதலியன இவ்விடத்துப் புனித நதிகள்.

ये नदियाँ भूमि को उपजाऊ बनाती हैं।

இந்நதிகள் நிலத்தை வளமாக்குகின்றன.

भारत महान देश है।

பாரதம் பெருமை வாய்ந்த நாடு.

वाल्मीकी, तुलसीदास, तिरुवल्लुवर, कम्बर जैसे श्रेष्ठ कवि यहीं पैदा हुए।

வால்மீகி, துளஸீதாஸ், திருவள்ளுவர், கம்பர் போன்ற சிறந்த கவிஞர்கள் இங்குதான் பிறந்தார்கள்.

चन्द्रगुप्त, अशोक, मनुनीति चोऴन, पोरकै पांडियन् जैसे बडे-बडे राजा लोगों ने यहाँ राज्य किया।

சந்திரகுப்தர், அசோகர், மனுநீதிச்சோழன், பொற்கைப்பாண்டியன் போன்ற பேரரசர்கள் இங்கு அரசாண்டனர்.

भारत में कई भाषाएँ बोली जाती हैं।

பாரதத்தில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

भाषाएँ अलग-अलग होने पर भी हम सब भारतीय हैं।
மொழிகள் வேறு வேறு ஆயினும் நாம் அனைவரும் பாரதமக்கள்.

हमारी भावना एक है।
நம் உணர்ச்சி ஒன்றுதான்.

रिश्ता-नाता एक ही है।
உறவு முறை ஒன்றேதான்.

हाँ ! हम सब भारतमाता के प्रिय बच्चे हैं।
ஆம், நாம் அனைவரும் பாரதத்தாயின் அன்புக் குழந்தைகள்.

आपस में भाई-भाई हैं।
நமக்குள் சகோதரர்கள்.

## 19. खादी

### கதர்

புதிய சொற்கள்

ज्यादातर — பெரும்பாலான.
सूत कातना — நூல் நூற்க.
करघा — தறி.
कपड़ा बुनना— துணி நெய்ய.
महीन — மெல்லிய.

भारत कृषि प्रधान देश है।
பாரதம் பயிர்த் தொழிலே முக்கியமாகக் கொண்ட நாடு.

यहाँ ज्यादातर लोग गाँवों में ही रहते हैं।

இங்கே பெரும்பாலான மக்கள் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள்.

गाँव के सभी लोग खेतों में काम नहीं करते।

கிராம மக்கள் எல்லோரும் வயல்களில் வேலைசெய்வதில்லை.

कुछ लोग खेतों में काम करते हैं।

சிலர் வயல்களில் வேலை செய்கிறார்கள்.

कुछ लोग चरखे में सूत कातते हैं।

சிலர் சர்க்காக்களில் நூல் நூற்கிறார்கள்.

और कुछ लोग करघे पर कपडा बुनते हैं।

வேறு சிலர் தறியில் துணி நெய்கிறார்கள்.

यही खादी है।

இதுவே கதர்த்துணி ஆகும்.

खादी का कपडा ज़रा मोटा होता है और महँगा भी है।

கதர்த் துணி சிறிது கனமாயும் கிராக்கியாகவும் இருக்கும்.

मिल का कपडा महीन होगा।

மில் துணி மெல்லியதாயிருக்கும்.

लेकिन हम खादी खरीदेंगे तो वह पैसा हमारे गाँव के उन गरीबों को मिलेगा।

ஆனால் நாம் கதர் வாங்குவோமாயின் அந்தப் பணம் நம் கிராமத்திலுள்ள அந்த ஏழைகளுக்குக் கிடைக்கும்.

इसलिए हम सबको खादी खरीदकर पहनना चाहिए।

ஆகையால் நாம் எல்லோரும் கதரையே வாங்கி அணிய வேண்டும்.

गाँधीजी हमेशा हाथ के सूत का कपडा ही पहनते थे।

காந்திஜி எப்போதும் கையால் நூற்ற நூல் ஆடையே அணிந்தார்.

वे रोज़ चरखे पर सूत कातते थे।

அவர் தினமும் சர்க்காவில் நூல் நூற்றுவந்தார்.

हमें भी रोज़ आधा घंटा ही सही, सूत कातना चाहिए।

நாமும் தினந்தோறும் அரைமணி நேரமாவது நூல் நூற்க வேண்டும்

## 20. पालतू जानवर

## வீட்டு மிருகங்கள்

புதிய சொற்கள்

पालतू — (வீட்டில்) வளர்க்கப்படுகிற.
स्वामि भक्त — எஜமான விசுவாசமுள்ள.
पहचानना — அடையாளம் கண்டு கொள்ள, அறிய
भूँकना — குரைக்க
ग्वाले — இடையர்கள்
दही — தயிர்
मक्खन — வெண்ணெய்
रखवाली करना — பாதுகாக்க.

हम अपने घरों में कई तरह के जानवरों को पालते हैं।

நாம் நம் வீடுகளில் பல விதமான பிராணிகளை வளர்க்கிறோம்.

कुछ लोग कुत्ता पालते हैं।

சிலர் நாய் வளர்க்கிறார்கள்.

कई तो बिल्ली को पालते हैं।

அநேகர் பூனையை வளர்க்கிறார்கள்.

गाय, भैंस और घोडा भी पालतू जानवर हैं।

பசுவும், எருமையும் குதிரையும் கூட வீட்டு மிருகங்கள் தாம்.

कुत्ता बडा स्वामिभक्त जानवर है।

நாய் மிக்க எஜமான விசுவாசமுள்ள பிராணி.

वह अपने घर के लोगों को खूब पहचानता है।

அது தன் வீட்டு மனிதர்களை நன்றாக அறிந்து கொள்கிறது.

नये आदमी को कभी घर में आने नहीं देता।

புதிய மனிதரை ஒருபோதும் வீட்டில் வரவிடுவதில்லை.

चोर को देखकर वह भूँकता है।

திருடனைப் பார்த்ததும் அது குரைக்கிறது.

इस तरह घर की रखवाली करता है।

இவ்விதமாக வீட்டைப் பாதுகாக்கிறது.

कई लोग बिल्ली को प्रेम से पालते हैं।

அநேகர் பூனையை அன்புடன் வளர்க்கிறார்கள்.

उसे दूध ज्यादा पसंद है।

அதற்குப் பால் மிகப் பிரியமானது.

वह चूहों को मारकार खाती है।

அது எலிகளைக் கொன்று தின்கிறது.

गाय, भैंस भी पालतू जानवर हैं।

பசுவும் எருமையும் வீட்டு மிருகங்களே.

ग्वाले इन्हें पालते हैं।

இடையர்கள் இவற்றை வளர்க்கிறார்கள்.

ये हमें दूध देती हैं।

இவை நமக்குப் பால் தருகின்றன.

दूध से दही, मक्खन और घी बनते हैं।

பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் எடுக்கப் படுகின்றன.

गाय का दूध मीठा होता है।

பசும்பால் இனிப்பாய் இருக்கும்.

घोडा तेज दौडता है।

குதிரை வேகமாய் ஓடுகிறது.

गाडी भी खींचता है।

வண்டியும் இழுக்கிறது.

कुछ अमीर लोग घोडा पालते हैं।

பணக்காரர்களில் சிலர் குதிரை வளர்க்கிறார்கள்.

वे उसपर सवारी करते हैं।

அவர்கள் அதன்மேல் சவாரி செய்கிறார்கள்.

## 21. सियार की चालाकी

## நரியின் தந்திரம்

புதிய சொற்கள் :

**चोंच** அலகு

**खूबसूरत** அழகான

**खुशी** சந்தோஷம், மகிழ்ச்சி

**फूलना** மகிழ்ச்சி அடைய

| | | | |
|---|---|---|---|
| गुण | குணம் | बेवकूफ़ी | முட்டாள்தனம், அறியாமை |
| बोली | குரல் | पछताना | பச்சாத்தாபப்பட, வருந்த |
| कृपा | தயை | | |
| तुरंत | உடனே | | |
| तारीफ़ | புகழ்ச்சி | | |

एक कौआ चोंच में रोटी का टुकड़ा लेकर आया।

ஒரு காகம் அலகில் ரொட்டித் துண்டை எடுத்துக் கொண்டு வந்தது.

वह एक पेड पर बैठ गया।

அது ஓர் மரத்தின்மேல் உட்கார்ந்து கொண்டது.

तब एक सियार ने उसे देखा।

அப்போது ஒரு நரி அதைப் பார்த்தது.

उसने कौए की रोटी को आप लेना चाहा।

அது காகத்தின் ரொட்டியைத் தானே எடுத்துக் கொள்ள விரும்பியது.

तुरंत उस पेड के नीचे गया और चालाकी से बोला—

உடனே அந்த மரத்தின் கீழ்ச் சென்று தந்திரமாகப் பேசியது—

"प्यारे दोस्त! तुम बडे खूबसूरत हो।

"அன்புள்ள நண்பா! நீ மிக அழகாயிருக்கிறாய்.

तुम्हारे गुण भी अच्छे हैं।

உன் குணங்களும் நன்றாயிருக்கின்றன.

इसलिए जरूर तुम्हारी बोली भी मीठी होगी।

ஆகவே அவசியம் உன் குரலும் இனிமையாக இருக்கும்.

कृपा करके मुझे एक गीत सुनाओ।"
தயை செய்து எனக்கு ஒரு பாட்டுப் பாடிக் காண்பி."

अपनी तारीफ सुनकर किसको खुशी न होगी?
தன் புகழ்ச்சியைக் கேட்டு யாருக்குத் தான் சந்தோஷம் ஏற்படாது?

कौआ भी फूल गया।
காகமும் மகிழ்ச்சி அடைந்தது.

वह मुँह खोला और काँव-काँव करने लगा।
அது வாய்திறந்து 'கா கா' என்று கரைய ஆரம்பித்தது.

रोटी का टुकडा नीचे गिर पड़ा।
ரொட்டித் துண்டு கீழே விழுந்து விட்டது.

चालाक सियार उसे लेकर भाग गया।
தந்திரமுள்ள நரி அதை எடுத்துக்கொண்டு ஓடி விட்டது.

कौआ अपनी बेवकूफ़ी पर बहुत पछताया।
காகம் தன் அறியாமைக்காக மிக வருந்தியது.

## 22. झूठ बोलने का नतीजा

## பொய் பேசியதன் பலன்

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| भेड़ | ஆடு | चिल्लाना | கூச்சலிட |
| चराना | மேய்க்க | आवाज़ | குரல், சப்தம் |
| भेड़िया | ஓநாய் | वापस | திரும்பி |

| | | | |
|---|---|---|---|
| पुकारना | கூப்பிட, அழைக்க | अगले दिन | மறுநாள் |
| बचाना | காப்பாற்ற | सचमुच | உண்மையாகவே. |
| शरारती | குறும்புக்காரன் | ज़ोर से | உரக்க |
| झूठमूठ | பொய்யாக | ध्यान देना | கவனம் செலுத்த |

एक लडका रोज़ जंगल में जाकर भेडें चराता था।
ஒரு சிறுவன் தினமும் காட்டில் போய் ஆடுகளை மேய்த்து வந்தான்.

गाँव के लोगों ने उससे कहा—
கிராமத்து மக்கள் அவனிடம் கூறினார்கள்—

"अगर भेडिया आवे तो हमें पुकारना।
ஓநாய் வந்தால் எங்களைக் கூப்பிடு.

हम आकर बचाएँगे।"
நாங்கள் வந்து காப்பாற்றுவோம்."

लेकिन बहुत दिनों तक भेडिया नहीं आया।
ஆனால் வெகு நாட்கள் வரை ஓநாய் வரவில்லை.

लडका शरारती था।
பையன் குறும்புக்காரன்.

एक दिन वह झूठमूठ चिल्लाया—
ஒரு நாள் அவன் பொய்யாகக் கூச்சலிட்டான்—

"भेडिया आया, भाई, मुझे बचाओ।"
ஓநாய் வந்தது, சகோதரா, என்னைக் காப்பாற்று."

आवाज़ सुनकर लोग दौड आये।
குரலைக் கேட்டு மக்கள் ஓடிவந்தார்கள்.

लेकिन वहाँ भेडिया नहीं था ।

ஆனால் அங்கே ஓநாய் இல்லை.

उनको देखकर लडका हँसा ।

அவர்களைக் கண்டு சிறுவன் சிரித்தான்.

वे नाराज़ होकर वापस चले गये ।

அவர்கள் கோபமடைந்து திரும்பிப்போய்விட்டார்கள்

कुछ दिन बाद लडका फिर उसी तरह चिल्लाया ।

சில தினங்களுக்குப் பிறகு சிறுவன் மீண்டும் அப்படியே கூச்சலிட்டான்.

कुछ लोगों ने उसपर ध्यान नहीं दिया ।

சிலர் அதில் கவனம் செலுத்தவில்லை.

कुछ लोग दौड आये ।

சிலர் ஓடி வந்தார்கள்.

इस बार भी वहाँ भेडिया नहीं था ।

இந்தத் தடவையும் அங்கு ஓநாய் இல்லை.

वे नाराज होकर लडके को खूब मारा ।

அவர்கள் கோபமுற்றுப் பையனை நன்றாய் அடித்தார்கள்.

अगले दिन सचमुच भेडिया आ गया ।

மறுநாள் உண்மையிலேயே ஓநாய் வந்துவிட்டது.

लडका डर गया और ज़ोर ज़ोर से चिल्लाने लगा ।

சிறுவன் பயந்து உரத்த குரலில் கூச்சலிடத் துவங்கினான்.

लेकिन कोई नहीं आये ।

ஆனால் எவரும் வரவில்லை.

लोगों ने सोचा– 'अब भी लडका शरारत करता है।
हमें नहीं जाना चाहिए।"

ஜனங்கள் நினைத்தார்கள்—"இப்போதும் சிறுவன் குறும்பு செய்கிறுன். நாம் போகக் கூடாது."

मेडिया लडके को और उसके कई भेडों को मारकर खा गया।

ஓநாய் சிறுவனையும் அவனுடைய பல ஆடுகளையும், அடித்துத் தின்று விட்டது.

## 23. किसान के लड़के

## குடியானவனின் பிள்ளைகள்

புதியசொற்கள் :—

| | | | |
|---|---|---|---|
| मेहनती | உழைப்பாளி | मुस्कुराना | புன்னகை செய்ய |
| होशियार | கெட்டிக்காரன், திறமைசாலி | जीतना | ஜயிக்க |
| सुधारना | சீர்திருத்த. | जीत | ஜயம், வெற்றி |
| उपाय | உபாயம், வழி. | पतली | மெல்லிய |
| गठ्ठा | கட்டு, சுமை. | तोडना | உடைக்க. |
| यत्न करना | முயற்சி செய்ய | | |

किसी गाँव में एक किसान रहता था।

ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் வசித்து வந்தான்.

उसके पाँच बेटे थे।

அவனுக்கு ஐந்து பிள்ளைகள்.

पाँचों बेटे मेहनती और होशियार थे।

ஐந்து பிள்ளைகளும் உழைப்பாளிகளாகவும் கெட்டிக் காரர்களாகவும் இருந்தார்கள்.

लेकिन वे हमेशा आपस में लडते थे।

ஆனால் அவர்கள் எப்போதும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள்.

इससे किसान को दुख होता था।

இதனால் குடியானவனுக்கு வருத்தமுண்டாயிற்று.

वह अपने लडकों को सुधारने का उपाय सोचता रहता था।

அவன் தன் பிள்ளைகளைச் சீர்திருத்தும் வழியை யோசித்துக் கொண்டிருந்தான்.

एक दिन उसने पाँच पतली लकडियों को एक रस्सी से बाँधा।

ஒரு நாள் அவன் ஐந்து மெல்லிய சுள்ளிகளை ஒரு கயிற்றால் கட்டினான்.

उस गट्ठे को हाथ में लेकर अपने लडकों को बुलाया।

அந்த சுள்ளிக்கட்டை கையில் எடுத்துக்கொண்டு தன் பிள்ளைகளை அழைத்தான்.

लडके आकर पिता के सामने खडे हो गये।

பிள்ளைகள் வந்து தந்தை எதிரில் நின்றார்கள்.

किसान ने बडे लडके से कहा —“ जरा इस गट्ठे को तोडो।”

குடியானவன் மூத்த மகனிடத்தில் கூறினான்—
“ கொஞ்சம் இந்தக் கட்டை உடை.”

बडे लडके ने कोशिश की, लेकिन तोड न सका।

மூத்த மகன் முயற்சி செய்தான், ஆனால் உடைக்க முடியவில்லை.

फिर दूसरे लडके ने यत्न किया ।

பிறகு இரண்டாம் மகன் முயன்றான்.

वह भी तोड न सका ।

அவனாலும் உடைக்கக் கூடவில்லை.

आखिर पाँचों से वह काम न हो सका ।

கடைசியில் ஐந்து பிள்ளைகளாலும் அதைச் செய்ய முடியவில்லை.

पिता ने गट्ठे की रस्सी काट दी ।

தந்தை சுள்ளிக் கட்டின் கயிற்றை அறுத்து விட்டான்.

सबके हाथ में एक-एक लकडी देकर तोडने को कहा ।

எல்லோருடைய கையிலும் ஒவ்வொரு சுள்ளியைத் தந்து உடைக்குமாறு கூறினான்.

लडकों ने आसानी से अपनी-अपनी लकडी तोड दी ।

பிள்ளைகள் எளிதாகத் தத்தம் சுள்ளியை உடைத்து விட்டனர்.

किसान ने मुस्कुराया और कहा—"लडको !

குடியானவன் புன்னகை செய்து கூறினான்—"பிள்ளைகளே!

पहले लकडियाँ एक साथ बंधी थीं, इसलिए तुम तोड न सके ।

முதலில் சுள்ளிகள் ஒன்றாய்க் கட்டுண்டிருந்தன, எனவே உங்களால் உடைக்க முடியவில்லை.

अलग होने पर तोड सके ।

தனியே பிரிந்ததும் உடைக்க முடிந்தது.

ऐसे ही तुम सब भाई मिलकर रहोगे तो तुम्हें कोई भी कुछ कष्ट न दे सकता ।

இதே போன்று சகோதரர்களான நீங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இருந்தீர்களானால் உங்களை எவரும் சிறிதும் துன்புறுத்த முடியாது

अलग हो जाओगे तो कोई भी तुम्हें जीत सकता है और दुख दे सकता है । ”

தனியே பிரிந்துவிடுவீர்களானால் எவரும் உங்களை வெல்ல முடியும், மேலும் துன்புறுத்தவும் கூடும்.”

लड़कों ने एकता की जरूरत को समझा ।

பிள்ளைகள் ஒற்றுமையின் அவசியத்தைப் புரிந்து கொண்டார்கள்.

उस दिन से वे आपस में मिलकर रहने लगे ।

அன்றை தினத்திலிருந்து அவர்கள் தமக்குள் ஒன்றுபட்டு வாழலானார்கள்.

## 24. கூட்டு வினைகள்

வினைச்சொல்லின் கருத்தை நன்கு தெளிவுபடுத்தவே கூட்டு வினைகள் உபயோகிக்கப்படுகின்றன. தமிழிலும் இவை உண்டு.

வந்து விட்டான், புரிந்து கொண்டான்,
பயந்து போனான், கொண்டு போனான்,

என்னுமிவற்றில் விட்டான், கொண்டான், போனான் என்ற சொற்கள் கூட்டு வினைகள். ஹிந்தியில் முக்கியமான சில கூட்டு வினைகள் வருமாறு :—

## जाना, देना, लेना, डालना, पड़ना

இவை வினைச் சொல்லின் பகுதியுடன் சேர்ந்து வரும். அவ்வாறு வரும்போது கூட்டு வினைகள் மட்டுமே எண், பால், காலத்திற்குரிய மாறுபாடுகளை அடையும்.

கூட்டு வினைகள் அமைந்த சில வாக்கியங்கள் வருமாறு :—

1. मेरी कलम खो गयी।
   என் பேனு தொலைந்து விட்டது.
2. पिताजी आज हैदराबाद चले गये।
   தந்தையார் இன்று ஹைதராபாத் சென்று விட்டார்.
3. सुरेश ने अपनी घडी बेच दी।
   ஸுரேஷ் தன் கடிகாரத்தை விற்று விட்டான்.
4. किसीने मेरी किताबें फाड दीं।
   எவனோ என் புத்தகங்களைக் கிழித்து விட்டான்.
5. ठीक से सुन लो ; मैं दूसरी बार नहीं कहूँगा।
   சரியாகக் கேட்டுக் கொள் ; நான் இரண்டாம் முறை கூறமாட்டேன்.
6. मैं तुम्हारी बात मान लूँगी।
   நான் உன் சொல்லை ஒப்புக் கொள்வேன்.
7. मैंने एक ही घंटे में सब काम कर डाला।
   நான் ஒரு மணி நேரத்திலேயே எல்லா வேலையையும் செய்து விட்டேன்.
8. चोरों ने मिलकर मुसाफिरों को मार डाला।
   திருடர்கள் சேர்ந்து பிரயாணிகளை அடித்து விட்டார்கள்.

9. उनको देखकर मैं चौंक पड़ा।

அவரைப் பார்த்து நான் திடுக்கிட்டு விட்டேன்.

10. आकाश में तारे दीख पड़ते हैं।

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன.

## 25. தொழிற் பெயர்

**आ, जा, सो** போன்ற வினைப்பகுதியுடன் **ना** என்னும் விகுதி சேர்ந்தால் அது தொழிற் பெயராகும்.

**आना, जाना, सोना**

தொழிற் பெயரைத் தொடர்ந்து ஓர் வேற்றுமை உருபு வரும்போது அதன் **ना** விகுதி **ने** என மாறும்.

1. क्यों जी, कहीं बाहर जाना है?

என் ஐயா, எங்கேனும் வெளியே போக வேண்டியிருக்கிறதா?

2. हाँ! एक मित्र से मिलना है।

ஆம்! ஓர் நண்பனைச் சந்திக்க வேண்டும்.

3. सुबह को टहलना अच्छा है।

காலையில் உலாவுவது நல்லது.

4. दिन में सोना बुरी आदत है।

பகலில் தூங்குவது கெட்ட பழக்கம்.

5. रात को देर तक जागना अच्छा नहीं है।

இரவில் வெகுநேரம் விழித்திருப்பது நல்லதன்று.

6. ठण्डे पानी से नहाना स्वास्थ्य के लिए अच्छा है।

குளிர்ந்த நீரில் குளிப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது.

7. सतीश खेलने में होशियार है।

ஸதீஷ் விளையாடுவதில் கெட்டிக்காரன்.

8. सरला काम करने में कुशल है।

ஸரளா வேலை செய்வதில் கெட்டிக்காரி.

9. इसे खरीदने से क्या लाभ ?

இதை வாங்குவதால் என்ன பயன் ?

10. शुद्ध अंग्रेजी बोलने का अभ्यास करो।

திருத்தமான ஆங்கிலம் பேசப் பழகு.

மேற்கண்ட வாக்கியங்களில் जाना, मिलना, टालना, सोना, जागना, नहाना, खेलना, करना, खरीदना, बोलना ஆகியவை தொழிற் பெயர்கள். கடைசி நான்கு வாக்கியங்களில் வேற்றுமை உருபுக்கு முன் தொழிற் பெயரின் ना விகுதி ने என்றாகியிருப்பதைக் காண்க.

जब, जहाँ, जितना, जैसे, जो முதலியவற்றின் உபயோகம்.

1. जब हमने विनोबा भावे के आने की खबर सुनी, तब हम बहुत खुश हुए।

வினோபா பாவே வரும் செய்தியைக் கேட்டபொழுது (எப்போது வினோபா பாவே வரும் செய்தியைக் கேட்டோமோ அப்போது) நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

மேற்கண்ட வாக்கியத்தில் அடைப்புக் குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற வாக்கிய அமைப்பு தமிழில் இல்லை யாதலால் ஒரு போதும் அவ்வாறு மொழி பெயர்க்கக்கூடாது. இவ்வாக்கிய அமைப்பு ஆங்கிலம், சம்ஸ்கிருதம் போன்று ஹிந்தியிலும் அமைந்துள்ளதைக் கவனிக்க.

2. जब पानी बरस रहा था तब मैं स्कूल में था।

மழை பெய்து கொண்டிருந்த போது நான் ஸ்கூலில் இருந்தேன்.

3. जहाँ तुम काम कर रहे हो वहाँ मैं भी काम करना चाहता हूँ।

நீ வேலை செய்யுமிடத்தில் நானும் வேலை செய்ய விரும்புகிறேன்.

4. जहाँ भी तुम जाओ, वहाँ तुम्हारी किस्मत भी साथ आएगी।

நீ போகுமிடத்திற் கெல்லாம் உன் அதிருஷ்டமும் தொடர்ந்துவரும்.

5. जितना धन उसके पास है उतना और किसीके पास नहीं।

அவனிடம் இருக்குமளவு செல்வம் வேறு எவரிடமும் இல்லை.

6. जितने दिन यहाँ रहे उतने दिनों का किराया दे दो।

இங்கு இருந்த நாட்களுக்கான வாடகையைக் கொடுத்துவிடு.

7. जैसा तुम चाहते हो वैसा करो।

நீ விரும்புகிறபடி செய்.

8. जैसा उनका भाषण था वैसा और किसीका नहीं।

அவருடைய பிரசங்கத்தைப்போல் வேறு எவருடையதுமில்லை.

9. जो तुम धन कमाना चाहो तो व्यापार करो।

நீ பணம் சம்பாதிக்க விரும்பினால் வியாபாரம் செய்.

NADU ARCHIVES LIBRARY
MADRAS

10. जो तुम मेरा काम देखो तो मैं एक बार गाँव हो आऊँ।

நீ என் வேலையைப் பார்த்துக் கொள்வதானால் நான் ஒரு முறை என் கிராமத்துக்குப்போய் வருவேன்.

**जब तब, जितना उतना, जो तो, जहाँ वहाँ, जैसा वैसा**

மேற்கண்ட சொற் சேர்க்கைகளை நன்கு கவனித்து நினைவிற் கொள்க.

## 26. செய்வினையும் செயப்பாட்டு வினையும்

செயப்பாட்டு வினை ஹிந்தியில் அவ்வளவு அதிகமாக உபயோகிக்கப் படுவதில்லை. ஓர் வினைச் சொல்லின் இறந்த கால உருவத்துடன் **जा** சேர்த்தால் செயப்பாட்டு வினை உருவம் கிடைக்கும்.

(உ-ம்) **लिख - लिखा जा ; सुन - सुना जा**

செயப்பாட்டு வினை வாக்கியத்தில் செயப்படு பொருள் எழுவாயாவதால் எண், பால் முதலியன அதை அனுசரித்தே அமையும்.

| செய்வினை | செயப்பாட்டுவினை |
|---|---|
| **मुरली ने पाठ पढा।**<br>முரளி பாடம் படித்தான். | **मुरली से पाठ पढा गया।**<br>முரளியால் பாடம் படிக்கப் பட்டது. |
| **मैं इतनी दूर नहीं चल सकता।**<br>நான் இவ்வளவு தொலைவு நடக்கமுடியாது. | **मुझसे इतनी दूर नहीं चला जाता।**<br>என்னால் இவ்வளவு தொலைவு நடக்கப்பட மாட்டாது. |

| செய்வினை | செயப்பாட்டுவினை |
|---|---|
| सुरेश ने एक पत्र लिखा। ஸுரேஷ் ஒரு கடிதம் எழுதினான். | सुरेश से एक पत्र लिखा गया। ஸுரேஷால் ஒரு கடிதம் எழுதப் பெற்றது. |
| स्कूलों में हिन्दी पढाते हैं। ஸ்கூல்களில் ஹிந்தி கற்பிக்கிறார்கள். | स्कूलोंमें हिन्दी पढायी जाती है। ஸ்கூல்களில் ஹிந்தி கற்பிக்கப் படுகிறது. |
| यह किताब मैंने खरीदी। இந்தப் புத்தகம் நான் வாங்கினேன். | यह किताब मुझसे खरीदी गयी। இந்தப்புத்தகம் என்னால் வாங்கப்பட்டது. |

**சில சொற்பிரயோகங்கள்**

**चाहिए**-வேண்டும்.

**चाहिए** என்னும் சொல் 'வேண்டும்' என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. **चाहिए** உபயோகிக்கும் போது வாக்கியத்தில் எழுவாயுடன் நான்காம் வேற்றுமை உருபான '**को**' சேர்க்க வேண்டும்.

(உ-ம்) तुमको (तुम्हें) क्या चाहिऐ ?

உனக்கு என்ன வேண்டும் ?

मुझको (मुझे) किताब चाहिए।

எனக்குப் புத்தகம் வேண்டும்.

उसको (उसे) पानी चाहिए।

அவனுக்குத் தண்ணீர் வேண்டும்.

मुझको जाना चाहिए।

நான் போக வேண்டும்.

तुमको पढना चाहिए।

நீ படிக்க வேண்டும்.

மேற்கண்டவற்றில் கடைசி இருவாக்கியங்களைக் கவனிக்கவும். ஹிந்தி இலக்கண மரபுக்கேற்ப (**चाहिए** வந்திருப்பதால்) எழுவாயுடன் '**को**' சேர்க்கப்பட்டிருந்த போதிலும் தமிழில் மொழி பெயர்க்கும் போது 'எனக்குப் படிக்க வேண்டும்,' 'உனக்குப் போக வேண்டும்' என்று மொழி பெயர்க்கலாகாது. மேற்கண்டபடி எழுதுவதே முறை. அதே போன்று தமிழிலிருந்து ஹிந்திக்கு மாறும் போது தமிழ்மரபை அங்கு ஏற்று '**मैं जाना चाहिए, तुम पढना चाहिए**' என்பதும் பிழை. இதை நேயர்கள் நன்கு கருத்திற் கொள்ள வேண்டும்.

**कि** - என்று

**कि** என்பது 'என்று' என்னும் பொருளைத் தரும் சொல். ஹிந்தியில், வாக்கியத்தில் **कि** யை உபயோகித்துப் பிறகு பேசுபவரின் வார்த்தைகள் நேர்க்கூற்ருக உபயோகிக்கப் படுகின்றன.

(உ-ம்) **केशव ने कहा कि मैं स्कूल जाऊँगा।**

'நான் ஸ்கூலுக்குப் போவேன்' என்று கேசவன் கூறினன்.

மேற்கூறிய வாக்கியத்தில் ஹிந்தி, தமிழ் இரு வாக்கியங்களிலும் உள்ள அமைப்பைக் கவனிக்கவும். ஹிந்தி வாக்கிய அமைப்பு ஆங்கிலமுறையை ஒத்திருப்பதைக் காணலாம்.

**சில வாக்கியங்கள்**

उससे कहो कि मैं अभी आता हूँ।

நான் இப்போதே வருவதாக அவனிடம் சொல்.

मैंने देखा कि ललिता रो रही थी।

லலிதா அழுதுகொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

स्टेशन-मास्टर से पूछो कि गाडी कब रवाना होगी ?

வண்டி எப்போது புறப்படும் என்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேள்.

गोपाल ने कहा कि मेरी किताब खो गयी।

"என் புத்தகம் தொலைந்து விட்டது" என்று கோபால் சொன்னான்.

சில சமயங்களில் காரணத்தைக் காட்டவும் कि உபயோகிக்கப் படும்.

(உ-ம்) मैं बहुत खुश हूँ कि आप मेरे यहाँ आये।

தாங்கள் என் வீட்டிற்கு வந்ததால் நான் மிக மகிழ்கிறேன்.

'அல்லது' என்ற பொருளிலும் कि உபயோகிக்கப் படும்.

(உ-ம்) तुम आज स्कूल जाओगे कि नहीं ?

நீ இன்று பள்ளிக்கூடம் போவாயா மாட்டாயா ?

यह बात सच है कि झूठ ?

இந்த விஷயம் உண்மையா அல்லது பொய்யா ?

आप मेरे पिताजी को जानते हैं कि नहीं ?

தாங்கள் என் தந்தையை அறிவீர்களா மாட்டீர்களா ?

वह पहले बंबई जाएगा कि देहली ?

அவன் முதலில் பம்பாய்க்குப் போவானா அல்லது டில்லிக்கா ?

# परिशिष्ट - பிற்சேர்க்கை

## खाने की चीजें और अनाज

### உணவுப் பொருள்களும் தானியங்களும்

| | | | |
|---|---|---|---|
| अंडा | முட்டை | दही | தயிர் |
| अदरख | இஞ்சி | दाल | பருப்பு |
| अनाज | தானியம் | दूध | பால் |
| अरंडी | ஆமணக்கு | धनिया | கொத்துமல்லி விதை |
| अरहर | துவரை | | |
| आटा | மாவு (கோதுமை) | धान | நெல் |
| इमली | புளி | नमक | உப்பு |
| ईख | கரும்பு | नाश्ता | சிற்றுண்டி |
| उड़द | உளுந்து | पकवान | புட்டு |
| कपूर | கர்ப்பூரம் | बाजरा | கேழ்வரகு |
| कस्तूरी | கஸ்தூரி | बेसन | கடலைமாவு |
| केसरी | குங்குமப்பூ | भात | சாதம் |
| गेहूँ | கோதுமை | मक्खन | வெண்ணெய் |
| घी | நெய் | मांस | இறைச்சி |
| चना | கடலை | मिर्च | மிளகாய் |
| चाय | தேயிலை | मिश्री | கற்கண்டு |
| चावल | அரிசி | मुरब्बा | முரப்பா |
| चिउडा | அவல் | मूँग | பயறு |
| जीरा | ஜீரகம் | मैदा | மைதாமாவு |
| जौ | பார்லி | मेथी | வெந்தயம் |
| ज्वार | கம்பு | राई | கடுகு |
| तरकारी | காய்கறி | लहसुन | உள்ளிப்பூண்டு |
| तमाखू | புகையிலை | शक्कर | சர்க்கரை |

| | | | |
|---|---|---|---|
| शरबत | சர்பத் | सेवई | சேமியா |
| शराब | சாராயம் | सोंठ | சுக்கு |
| शहद | தேன் | सौंफ | வெள்ளை ஜீரகம் |
| शोरबा | குழம்பு, ரசம் | हल्दी | மஞ்சள் |
| सरसों | பெரிய கடுகு | हींग | பெருங்காயம் |

## तरकारी, फल

காய்கறி, பழங்கள்

| | | | |
|---|---|---|---|
| अंगूर | பச்சைதிராட்சை | चचींडा | புடலங்காய் |
| अंजीर | அத்திப்பழம் | नारंगी | ஆரஞ்சுப்பழம் |
| अनार | மாதுளம்பழம் | नाशपाती | பேரிக்காய் |
| आंवला | நெல்லிக்காய் | प्याज | வெங்காயம் |
| आम | மாம்பழம் | पान | வெற்றிலை |
| आलू | உருளைக்கிழங்கு | बादाम | வாதுமை |
| ककडी | வெள்ளரிக்காய் | बैंगन | கத்திரிக்காய் |
| कटहल | பலாப்பழம் | बीज | விதை |
| करेला | பாகற்காய் | भिण्डी | வெண்டைக்காய் |
| काजू | முந்திரிப்பருப்பு | मेवा | உலர்த்திய பழம் |
| कुम्हडा | பூசனிக்காய் | लौकी | சுரைக்காய் |
| केला | வாழைப்பழம் | सहजन | முருங்கைக்காய் |
| खजूर | பேரீச்சம்பழம் | सुपारी | பாக்கு |
| गोभी | முட்டைக்கோஸ் | सेम | பீன்ஸ் அவரை |

## शरीर के अंग

உடல் உறுப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| अंगुली | விரல் | आँख | கண் |
| अंगूठा | கட்டைவிரல் | आँत, अंतडी | குடல் |

| | | | |
|---|---|---|---|
| एडी | குதிகால் | नाक | மூக்கு. |
| कन्धा | தோள் | नाडी | நாடி. |
| कमर | இடுப்பு | नाभी | தொப்புள். |
| कलाई | மணிக்கட்டு | पपोटा | கண் இமை. |
| कान | காது | पर | சிறகு. |
| खुर | குளம்பு | पलक | கண் இமை, உரோமம். |
| खोपडी | மண்டை ஓடு | पसुली | எலும்பு. |
| गर्दन | கழுத்து | पाँव | பாதம். |
| गला | தொண்டை | पीठ | முதுகு. |
| गाल | கன்னம் | पेट | வயிறு. |
| गोद | மடி | बगल | கக்கம். |
| चमडा | தோல் | बदन | உடல். |
| चेहरा | முகம் | बाँह | புஜம். |
| चोंच | அலகு | बाल | தலைமயிர். |
| जबडा | தாடை | भौंह | புருவம். |
| जांघ | தொடை | मगज, दिमाग | மூளை. |
| जोड | மூட்டு | मुँह | முகம், வாய். |
| टांग | கால் | मूँछ | மீசை. |
| तारा | கருவிழி | सिर | தலை. |
| तिल्ली | குரல்வளை | सीना | மார்பு. |
| दाँत | பல் | हड्डी | எலும்பு. |
| नख, नाखून | நகம். | हाथ | கை. |
| नस | நரம்பு. | | |

## उद्योगी

### தொழிலாளிகள்

| | | | |
|---|---|---|---|
| कसाई | கசாப்புக்காரன். | कुली | கூலியாள். |
| किसान | குடியானவன். | गडरिया | ஆட்டிடையன். |

| | | | |
|---|---|---|---|
| गवैया | பாடகன். | मेहतर | தோட்டி. |
| ग्वाला | மாட்டிடையன். | रसोइया | சமையற்காரன். |
| चमार | சக்கிலியன். | राज | கொத்தன். |
| जुलाहा | நெசவாளி. | वकील | வக்கீல். |
| दर्जी | தையற்காரன். | साईस | குதிரைக்காரன். |
| नाई, हज्जाम | நாவிதன். | सोनार | தட்டான். |
| बढ़ई | தச்சன். | हकीम | வைத்தியன். |
| मछुआ | செம்படவன். | | |

## बीमारियाँ

### நோய்கள்

| | | | |
|---|---|---|---|
| कब्ज़ | மலச்சிக்கல். | ताऊन | ப்ளேக் |
| कमलबाय | காமாலை | दमा | இழுப்பு. |
| कै, वमन | வாந்தி, குமட்டல். | दाद | படர் தேமல். |
| कोढ़ | குஷ்டம். | बवासीर | மூலநோய். |
| खाँसी | இருமல். | फुसी | பரு. |
| गश, मूर्छा | மூர்ச்சை. | बदहज़मी | அஜீரணம். |
| गठिया | வாதம். | बुखार | காய்ச்சல், ஜுரம். |
| घाव, जख्म | காயம் (புண்) | सूजन | வீக்கம், தடிப்பு. |
| चेचक | வைசூரி. | सिरदर्द | தலைவலி. |
| जुकाम, सर्दी | ஜலதோஷம் | हैजा | காலரா. |

## धातुएँ

### உலோகங்கள்

| | | | |
|---|---|---|---|
| काँसा | வெண்கலம். | पीतल | பித்தளை. |
| चाँदी | வெள்ளி. | लोहा | இரும்பு. |
| जस्ता | துத்தநாகம். | सोना | தங்கம். |
| ताम्बा | தாமிரம். | | |

## रंग

### நிறங்கள்

| | | | |
|---|---|---|---|
| काला | கருமை நிறம். | बैंगनी | ஊதா நிறம். |
| केसरिया | குங்குமப்பூ நிறம். | भूरा | பழுப்பு நிறம். |
| गुलाबी | ரோஜா நிறம். | लाल | சிவப்பு நிறம். |
| गेरुआ | காவி நிறம். | सफेद | வெண்மை நிறம். |
| नीला | நீல நிறம். | हरा | பச்சை நிறம். |
| पीला | மஞ்சள் நிறம். | | |

## रिश्तेदार

### உறவினர்கள்

| | | | |
|---|---|---|---|
| चाचा | சிற்றப்பன். | देवरानी | கணவனின் தம்பி மனைவி. (சிறிய ஓரகத்தி.) |
| चाची | சிற்றன்னை. | ननद | நாத்தி. |
| चचेरा भाई | சிற்றப்பன் பிள்ளை. | ननदोई | நாத்தியின் கணவன். |
| चचेरी बहन | சிற்றப்பன் பெண். | नाती | பேரன் (மகள் வழி.) |
| जेठ | கணவனின் அண்ணன். (பெரிய மைத்துனன்.) | नतिनी | பேர்த்தி.(மகள் வழி.) |
| जेठानी | கணவனின் அண்ணி. (பெரிய ஓரகத்தி.) | नाना | தாத்தா (தாய்வழி.) |
| ताऊ | பெரியப்பன். | नानी | பாட்டி (தாய்வழி.) |
| ताई | பெரியன்னை | पोता | பேரன் (மகன் வழி.) |
| दादा | தாத்தா (தகப்பன்வழி.) | पोती | பேர்த்தி (மகன் வழி) |
| दादी | பாட்டி (தகப்பன் வழி.) | फुफेरा भाई | அத்தை மகன் |
| देवर | கணவனின் தம்பி (சிறிய மைத்துனன்) | फुफेरी बहन | அத்தை மகள் |
| | | फूफा | அத்தையின் கணவன். |
| | | फूफी, बुआ | அத்தை, |
| | | बहन | சகோதரி. |
| | | बहनोई | சகோதரியின் கணவன் |

| | | | |
|---|---|---|---|
| भाई | சகோதரன். | माँ | அம்மா. |
| भाभी | சகோதரன் மனைவி. | मामा | மாமா. |
| भतीजा | சகோதரன் மகன். | मामी | மாமி. |
| भतीजी | சகோதரன் மகள். | मौसी | சித்தி (தாய்வழி). |
| भांजा | சகோதரியின் மகன் | मौसा | சித்தியின் கணவன். |
| भांजी | சகோதரியின் மகள் | समधी | சம்பந்தி |
| ममेरा भाई | சகோதரியின் மகன். | समधिन | சம்பந்தியம்மாள் |
| | | सौत | சக்களத்தி. |
| ममेरी बहन | மாமன் மகள் | | |

## गिनती

எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| एक | 1 | सत्रह | 17 |
| दो | 2 | अठारह | 18 |
| तीन | 3 | उन्नीस | 19 |
| चार | 4 | बीस | 20 |
| पाँच | 5 | इक्कीस | 21 |
| छः | 6 | बाईस | 22 |
| सात | 7 | तेईस | 23 |
| आठ | 8 | चौबीस | 24 |
| नौ | 9 | पच्चीस | 25 |
| दस | 10 | छब्बीस | 26 |
| ग्यारह | 11 | सत्ताईस | 27 |
| बारह | 12 | अट्ठाईस | 28 |
| तेरह | 13 | उनतीस | 29 |
| चौदह | 14 | तीस | 30 |
| पंद्रह | 15 | इकतीस | 31 |
| सोलह | 16 | बत्तीस | 32 |

| | | | |
|---|---|---|---|
| तैंतीस | 33 | साठ | 60 |
| चौंतीस | 34 | इकसठ | 61 |
| पैंतीस | 35 | बासठ | 62 |
| छत्तीस | 36 | तिरसठ | 63 |
| सैंतीस | 37 | चौंसठ | 64 |
| अड़तीस | 38 | पैंसठ | 65 |
| उनचालीस | 39 | छियासठ | 66 |
| चालीस | 40 | सतसठ | 67 |
| इकतालीस | 41 | अडसठ | 68 |
| बयालीस | 42 | उनहत्तर | 69 |
| तैंतालीस | 43 | सत्तर | 70 |
| चवालीस | 44 | इकहत्तर | 71 |
| पैंतालीस | 45 | बहत्तर | 72 |
| छियालीस | 46 | तिहत्तर | 73 |
| सैंतालीस | 47 | चौहत्तर | 74 |
| अडतालीस | 48 | पचहत्तर | 75 |
| उनचास | 49 | छिहत्तर | 76 |
| पचास | 50 | सतत्तर | 77 |
| इक्कावन | 51 | अठहत्तर | 78 |
| बावन | 52 | उन्यासी | 79 |
| तिरपन | 53 | अस्सी | 80 |
| चौवन | 54 | इकासी | 81 |
| पचपन | 55 | बयासी | 82 |
| छप्पन | 56 | तिरासी | 83 |
| सत्तावन | 57 | चौरासी | 84 |
| अट्ठावन | 58 | पचासी | 85 |
| उनसठ | 59 | छियासी | 86 |

| | |
|---|---|
| सत्तासी | 87 |
| अठासी | 88 |
| नवासी | 89 |
| नब्बे | 90 |
| इकानवे | 91 |
| बानवे | 92 |
| तिरानवे | 93 |
| चौरानवे | 94 |
| पंचानवे | 95 |
| छियानवे | 96 |
| सत्तानवे | 97 |
| अट्ठानवे | 98 |
| निन्यानवे | 99 |
| सौ | 100 |

| | | |
|---|---|---|
| हजार | 1000 | ஆயிரம் |
| दस हजार | 10000 | பதினாயிரம் |
| लाख | 100000 | லட்சம் |
| करोड | 10000000 | கோடி |
| अरब | 1000000000 | நூறு |
| पाव | கால் $\frac{1}{4}$ | |
| आधा | அரை $\frac{1}{2}$ | |
| पौन | முக்கால் $\frac{3}{4}$ | |

| | |
|---|---|
| सवा | ஒன்றேகால் $1\frac{1}{4}$ |
| डेढ | ஒன்றரை $1\frac{1}{2}$ |
| पौने दो | ஒன்றே முக்கால் $1\frac{3}{4}$ |
| सवा दो | இரண்டேகால் $2\frac{1}{4}$ |
| ढाई | இரண்டரை $2\frac{1}{2}$ |
| पौनेतीन | இரண்டேமுக்கால் $2\frac{3}{4}$ |
| साडे तीन | மூன்றரை $3\frac{1}{2}$ |
| पौने चार | மூன்றேமுக்கால் $3\frac{3}{4}$ |
| सवा चार | நாலேகால் $4\frac{1}{4}$ |
| साडे चार | நாலரை $4\frac{1}{2}$ |
| पौने पाँच | நாலே முக்கால் |
| पहला | முதலாவது |
| दूसरा | இரண்டாவது |
| तीसरा | மூன்றாவது |
| चौथा | நான்காவது |
| पांचवां | ஐந்தாவது |
| छठा | ஆறாவது |
| सातवां | ஏழாவது |
| आठवां | எட்டாவது |
| नौवां | ஒன்பதாவது |
| दसवां | பத்தாவது |
| दोनों | இருவரும், இரண்டும். |

---

**Price : Rs. 1 - 50**

---

*Sole Selling Agents :*

**Messrs. P. T. BELL & CO.,**

**No. 7, Sunkurama Chetty Street,**

**M A D R A S - 1.**